மாணவர்கள் நலனுக்காக

# TIME VOICE

# காலத்தின் குரல்

## வரலாறு

11-ஆம் வகுப்பு

www.Padasalai.Net

சென்டம் மார்க்

90
---
90

A. அறிவழகன் M.A., M.Phil., M.Ed.,
வரலாறு முதுகலை ஆசிரியர், வேலூர் மாவட்டம்
தொடர்புக்கு - 9944 573722

**தயாரிப்பின் நோக்கம் :**

இந்த கையேடு தயாரிப்பின் முதன்மை நோக்கம் மாணவர்கள் இதிலுள்ள விடைக் குறிப்புகளைப் படித்து வரலாறு பாடத்தில் அதிக மதிப்பெண் பெற்று சிறந்த மாணவர்களாக உருவாக வேண்டும் என்பதே ஆகும். வரலாறு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனுக்காக வேண்டி முழுவீச்சில் இரவுபகல் பாராமல் ஒரு ஆசிரியரின் கடுமையான உழைப்பால் தயாரிக்கப்பட்டு உள்ளது. மாணவர்களுக்கு இருக்கக்கூடிய குறுகிய காலத்தில் விரைவாக தேர்விற்கு தயாராகும் வண்ணம் இது மிக எளிமையானதாக இருக்கும்.

வரலாறு பாடத்திற்கு இல்லாமை நிலையை நீக்க வேண்டும் என்ற லட்சியத்தின் பயனே இந்த கையேடு. வரலாறு என் வாழ்க்கையின் அச்சாரம். வரலாறு ஆசிரியர்களின் பணிச் சுமையைக் குறைத்து நேரத்தை மிச்சப்படுத்தும் வகையில் இந்த கையேடு தயாரித்து வழங்குவதில் ஒரு வரலாறு ஆசிரியராக நான் ஆனந்தமும் பெருமிதமும் கொள்கிறேன்.

www.Padasalai.Net

**அன்புள்ள மாணவர்களுக்கு :**

மாணவர்களே வாருங்கள்! நீங்கள் வரலாறு படிக்கலாம், வரலாறு படைக்கலாம், வரலாற்றில் இடம் பிடிக்கலாம். நமது வரலாறு பாடம் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி என்பதை உணர்ந்து மாணவர்கள் சிறப்பாக படிக்க வேண்டும். நாம் எந்த பாடம் படிக்கிறோம் என்பது ஒரு செய்தி. ஆனால் அந்த பாடத்தை எந்த அளவுக்கு ஆழ்ந்து படித்து சாதிக்கிறோம் என்பது சரித்திரமாகும். எனவே வரலாறு மாணவர்கள் வெறும் செய்தியாக இல்லாமல் ஒரு சரித்திரமாக மாறி வரலாற்றில் இடம் பிடிக்க வாழ்த்துகிறேன்.

| 11 ஆம் வகுப்பு | வரலாறு | 1 - மார்க் | A . அறிவழகன் - வேலூர் மாவட்டம் |
|---|---|---|---|

**சரியான விடைையத் தேர்வு செய்க.**

பாடம் - 1

1. எழுத்துகள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ........................... எனப்படுகிறது.

(அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் (ஆ) வரலாற்றுக் காலம்

(இ) பழங் கற்காலம் (ஈ) புதிய கற்காலம்

2. வரலாற்றின் பழமையான காலம் ................................. ஆகும்.

(அ) பழங் கற்காலம் (ஆ) புதிய கற்காலம்

(இ) செம்புக் காலம் (ஈ) இரும்புக் காலம்

3. பழங் கற்காலக் கருவிகள் முதன்முதலில் ................ இல் அடையாளம் காணப்பட்டன.

(அ) 1860 (ஆ) 1863 (இ) 1873 (ஈ) 1883

4. மத்திய பிரதேசத்தில் உள்ள சோன் பள்ளத்தாக்கில் உள்ள பாகோர் -1, பாகோர்-3 ஆகியவை ......................................... நாகரிகம் நிலவிய இடங்கள்.

(அ) கீழ்ப்பழங் கற்காலம் (ஆ) இடைப்பழங் கற்காலம்

(இ) மேல்பழங் கற்காலம் (ஈ) புதிய கற்காலம்

5. மெஹர்கார் ......................................... பண்பாட்டுடன் தொடர்புடையது.

(அ) பழைய கற்காலம் (ஆ) புதிய கற்காலம்

(இ) இடைக் கற்காலம் (ஈ) செம்புக்காலம்

6. .................................. கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும் ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன.

(அ) க்யூனிபார்ம் (ஆ) ஹைரோக்ளைபிக்ஸ் (இ) தேவநாகரி (ஈ) கரோஷ்டி

7. பர்சஹோம் ................................. நிலவிய இடமாகும்

(அ) காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு

(ஆ) கங்கைச் சமவெளியின் புதியகற்காலப் பண்பாடு

(இ) கிழக்கிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு

(ஈ) தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



8. தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது ................................ ஆகும்.

(அ) பொ.ஆ.மு. 3000 - 2600 (ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900

(இ) பொ.ஆ.மு. 1900 - 1700 (ஈ) பொ.ஆ.மு. 1700 - 1500

9. ஹரப்பா மக்களுக்கு முக்கியமான வாழ்வாதார வழிமுறையாக .................... இருந்தது.

(அ) வேளாண்மை (ஆ) மட்பாண்டம் செய்தல்

(இ) கைவினைத் தொழில்கள் (ஈ) மீன் பிடித்தல்

10. சிந்து நாகரிகம் ஏறத்தாழ ................................... இலிருந்து வீழ்ச்சி அடைந்தது.

(அ) பொ.ஆ.மு.1800 (ஆ) பொ.ஆ.மு.1900

(இ) பொ.ஆ.மு.1950 (ஈ) பொ.ஆ.மு.1955

## பாடம் - 2

1. வேதப் பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர் .................................

(அ) பிராமணங்கள் (ஆ) சங்கிதைகள்

(இ) ஆரண்யகங்கள் (ஈ) உபநிடதங்கள்

2. மேல் கங்கைச் சமவெளிப் பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(அ) குருபாஞ்சலம் (ஆ) கங்கைச் சமவெளி (இ) சிந்துவெளி (ஈ) விதேகா

3. ஆதிச்சநல்லூர் ................................... மாவட்டத்தில் அமைந்துள்ளது.

(அ) கோயம்புத்தூர் (ஆ) திருநெல்வேலி (இ) தூத்துக்குடி (ஈ) வேலூர்

4. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்.

(i) சேனானி - படைத்தளபதி

(ii) கிராமணி - கிராமத் தலைவர்

(iii) பலி - தன்னார்வத்தால் கொடுக்கப்பட்டது

(iv) புரோகிதர் - ஆளுநர்

மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?

(அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

5. கூற்று (கூ) : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்று இல்லை.

காரணம் (கா) : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளில் இருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

(அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரியானது. காரணம் தவறானது.

(ஈ) கூற்று காரணம் இரண்டும் சரியானவை.

## பாடம் - 3

1. புத்தர் தனது முதல் போதனையை ................................... இல் நிகழ்த்தினர்.

(அ) சாஞ்சி (ஆ) வாரணாசி (இ) சாரநாத் (ஈ) லும்பினி

www.Padasalai.Net

2. அஜாத சத்ருவுக்கும் புத்தருக்கும் இடையேயான சந்திப்பைக் குறிப்பிடும் பௌத்த நூல் ........................................ ஆகும்.

(அ) சீவகசிந்தாமணி (ஆ) அச்சரங்க சூத்திரம்

(இ) கல்பசூத்திரம் (ஈ) சமண்ணப சுத்தம்

3. பகவதிசூத்திரம் ஒரு ................................... நூலாகும்

(அ) பௌத்தம் (ஆ) சமணம் (இ) ஆசீவகம் (ஈ) வேதம்

4. ............................. வேளாண்மை முறையை மேம்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியது.

(அ) இரும்பு (ஆ) வெண்கலம் (இ) செம்பு (ஈ) பித்தளை

5. வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு .................................... ஆகும்.

(அ) கோசலம் (ஆ) அவந்தி (இ) மகதம் (ஈ) குரு

## பாடம் - 4

1. அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர் ................................... ஆவார்.

   (அ) தாமஸ் சாண்டர்ஸ் (ஆ) ஜேம்ஸ் பிரின்செப்

   (இ) சர்ஜான் மார்ஷல் (ஈ) வில்லியம் ஜோன்ஸ்

2. மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர், ஹர்யங்கா வம்சத்தை சேர்ந்த ..........................................

   (அ) பிம்பிசாரர் (ஆ) அஜாசத்ரு (இ) அசோகர் (ஈ) மகாபத்ம நந்தர்

3. அலெக்சாண்டர் இந்தியா மீது படையெடுத்து வந்தபோது மகதத்தின் அரசராக இருந்தவர் ................................ ஆவார்.

   (அ) மகாபத்ம நந்தர் (ஆ) தன நந்தர் (இ) பிந்துசாரர் (ஈ) பிம்பிசாரர்

4. .................... என்ற இலங்கையில் கிடைத்த, பாலியில் எழுதப்பட்ட விரிவான வரலாற்று நூல் மௌரியப் பேரரசு பற்றி அறிந்துகொள்ள உதவும் முக்கியமான சான்றாகும்.

   (அ) மகாவம்சம் (ஆ) தீபவம்சம் (இ) பிரமாணம் (ஈ) முத்ராராட்சசம்

5. ................................. என்ற விசாகதத்தரின் நாடகம் சந்திரகுப்தர் பற்றியும், அவர் மகதப் பேரரசின் அரியணை ஏறியது பற்றியும் கூறுகிறது.

   (அ) முத்ராராட்சசம் (ஆ) ராஜதரங்கிணி

   (இ) அர்த்தசாஸ்திரம் (ஈ) இண்டிகா

6. மெகஸ்தனிஸ் எழுதிய ................................... சந்திரகுப்தரின் அரசவையையும், அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.

   (அ) இண்டிகா (ஆ) முத்ராராட்சசம்

   (இ) அஷ்டத்யாயி (ஈ) அர்த்தசாஸ்திரம்

7. .................................. நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

   (அ) அர்த்தசாஸ்திரம் (ஆ) இண்டிகா

   (இ) ராஜதரங்கிணி (ஈ) முத்ராராட்சசம்

www.Padasalai.Net

| 11 ஆம் வகுப்பு | வரலாறு | 1 - மார்க் | A . அறிவழகன் - வேலூர் மாவட்டம் |
|---|---|---|---|

## பாடம் - 5

1. கரிகாலன் .................................. மகனானவார்.

   (அ) செங்கண்ணன் (ஆ) கடுங்கோ

   (இ) இளஞ்சேட் சென்னி (ஈ) அதியமான்

2. கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது.

   (i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்

   (ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்

   (iii) கஜபாகு - இலங்கை

   (iv) திருவஞ்சிக்களம் - சோழர்

   (அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv

3. .................................. ராஜசூய யாகத்தை நடத்தினார்

   (அ) பெருநற்கிள்ளி (ஆ) முதுகுடுமிப் பெருவழுதி

   (இ) சிமுகா (ஈ) அதியமான்

www.Padasalai.Net

4. இந்திர விகாரம் பற்றி .................................. குறிப்பிடுகிறது.

   (அ) மணிமேகலை (ஆ) சிலப்பதிகாரம்

   (இ) அசோகர் கல்வெட்டு (ஈ) சேரர் நாணயம்

5. இக்சவாகுகள் .................................. பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.

   (அ) ஆந்திர - கர்நாடகா (ஆ) ஒடிசா (இ) தக்காணப் பகுதி (ஈ) பனவாசி

6. கீழ்க்காணும் கூற்றுகளை வாசித்து தவறான கூற்றை வெளிக் கொணர்க

   (i) களப்பிரர்கள் கலியரசர்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்

   (ii) களப்பிரர்கள் சைவத்தை ஆதரித்தனர்

   (iii) பல்லவரையும் பாண்டியரையும் களப்பிரர் தோற்கடித்தனர்

   (iv) இக்சவாகுகள் வேதவேள்விகளை ஆதரித்தனர்.

   (அ) i (ஆ) ii (இ) iii (ஈ) iv

## பாடம் - 6

1. அலெக்ஸாண்டரின் திறன்மிக்க தளபதிகளுள் ஒருவர் ..................................

   (அ) செலியுகஸ் நிகேடர் (ஆ) அன்டிகோனஸ்

   (இ) அண்டியோகஸ் (ஈ) டெமெட்ரியஸ்

2. செலியுகஸ் நிகேடரால் தலைநகரம் பாடலிபுத்திரத்துக்கு ............................................ தூதராக மெகஸ்தனிஸ் அனுப்பப்பட்டார்.

   (அ) ரோமானிய (ஆ) கிரேக்க (இ) சீன (ஈ) பிரிட்டிஷ்

3. வழக்கமான தூதர்கள் மற்றும் கடிதப் பரிமாற்றம் ....................................

   (அ) இந்தியாவிலிருந்து மேற்குக்கான வழக்கமான வணிகத்தைப் பாதித்தது.

   (ஆ) இந்தியாவிலிருந்து மேற்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

   (இ) இந்தியாவிலிருந்து கிழக்குக்கு வழக்கமான வணிகத்திற்கு உதவியது.

   (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

www.Padasalai.Net

4. இந்தோ - கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர்.

   (அ) யூதிடெமஸ் (ஆ) டெமெட்ரியஸ்

   (இ) மினாண்டர் (ஈ) ஆண்டியால்தஸடஸ்

5. குஷாண நாணயங்கள் ....................... நாணயங்களைவிட உயர்ந்த தரத்தில் இருந்தன.

   (அ) ரோமானிய (ஆ) கிரேக்க (இ) குப்த (ஈ) சாதவாகன

6. இந்தோ - கிரேக்கக் கலை மற்றும் சிற்பப் பாணி ..................... என்று குறிப்பிடப்பட்டது.

   (அ) மதுரா கலை (ஆ) காந்தாரக் கலை

   (இ) பாக் கலை (ஈ) பாலா கலை

7. கீழ்கண்டவற்றில் பொருத்தமற்றது எது?

   (அ) புத்தசரிதம் - அஷ்வகோஷர்

   (ஆ) எரித்ரியக் கடலின் பெரிப்ளஸ் - மெகஸ்தனிஸ்

   (இ) அர்த்தசாஸ்திரம் - கௌடில்யர்

   (ஈ) காமசூத்திரம் - வாத்சாயனர்

8. சக சத்ரப்களில் மிகவும் புகழ் பெற்றவர் ....................................

(அ) மொக (ஆ) ருத்ரதாமன்

(இ) அஸிஸ் (ஈ) யசோவர்மன்

9. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்.

(i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.

(ii) அரேபியக் கடலில் வீசும் பருவக் காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.

(அ) (i) சரி (ஆ) (ii) சரி

(இ) (i)(ii) இரண்டுமே சரி (ஈ) (i)(ii) இரண்டுமே தவறு.

10. .................................... பகுதியில் ரோமானிய நாணயங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

(அ) அரிக்கமேடு (ஆ) ஆதிச்சநல்லூர் (இ) புகார் (ஈ) பல்லாவரம்.

www.Padasalai.Net

## பாடம் - 7

1. குப்தர் காலம் குறித்த கீழ்க்கண்ட சான்றுகளின் எது நம்ப முடியாதது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

(அ) இலக்கியச் சான்றுகள் (ஆ)கல்வெட்டுச் சான்றுகள்

(இ) நாணயச் சான்றுகள் (ஈ) கதைகள், புராணங்கள்

2. பொருத்துக.

| இலக்கியப் படைப்பு | | எழுதியவர் |
|---|---|---|
| 1. சூரிய சித்தாந்தா | - | தன்வந்திரி |
| 2. அமரகோஷா | - | வராஹமிகிரா |
| 3. பிருஹத்சம்ஹிதா | - | ஹரிசேனா (ஆரியபட்டர்) |
| 4. ஆயுர்வேதா | - | அமரசிம்மா |

(அ) 4, 3, 1, 2 (ஆ) 4, 1, 2, 3 (இ) 4, 2, 1, 3 (ஈ) 4, 3, 2, 1

3. ............................................ க்கு கவிராஜா என்று பட்டம் அளிக்கப்பட்டது.

   (அ) முதலாம் சந்திர குப்தர் (ஆ) சமுத்திர குப்தர்

   (இ) இரண்டாம் சந்திர குப்தர் (ஈ) ஸ்ரீகுப்தர்

4. ............................................ என்ற சீனப் பயணி பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டின் இந்திய சமூகத்தைக் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

   (அ) இட்சிங் (ஆ) யுவான்-சுவாங்

   (இ) பாஹியான் (ஈ) வாங்-யுவான்-சீ

5. கீழ்க்கண்டவற்றில் எது குப்தர் காலத்துக் குடைவரை குகைக் கோயில் இல்லை?

   (அ) உதயகிரி குகை (ஒடிசா) (ஆ) அஜந்தா- எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

   (இ) எலிபண்டா குகை (மகாராஷ்டிரா) (ஈ) பாக் (மத்தியப் பிரதேசம்)

6. தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் ............................

   (அ) திங்கநாகர் (ஆ) வசுபந்து (இ) சந்திரகாமியா (ஈ) வராகமிகிரர்

www.Padasalai.Net

7. .................................... என்பது காளிதாசரின் முக்கியமான கவிதைப் படைப்பாகும்.

   (அ) சாகுந்தலம் (ஆ) ரகுவம்சம் (இ) குமாரசம்பவம் (ஈ) மேகதூதம்

## பாடம் - 8

1. பிரபாகர வர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை .................................................. என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

   (அ) கிரகவர்மன் (ஆ) தேவகுப்தர் (இ) சசாங்கன் (ஈ) புஷ்யபுத்திரர்

2. ஹர்ஷர் கன்னோசியின் அரியணையை .................................. இன் அறிவுரையின் படி ஏற்றுக் கொண்டார்.

   (அ) கிரகவர்மன் (ஆ) அவலோகிதேஷ்வர போதிசத்வர்

   (இ) பிரபாகரவர்த்தனர் (ஈ) போனி

3. ........................ என்பவர் அயலுறவு மற்றும் போர்கள் தொடர்பான அமைச்சர் ஆவார்.

   (அ) குந்தலா (ஆ) பானு (இ) அவந்தி (ஈ) சர்வாகதா

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. கீழ்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?

(அ) ஹர்ஷசரிதம் (ஆ) பிரியதர்ஷிகா

(இ) அர்த்தசாஸ்திரா (ஈ) விக்ரம ஊர்வசியம்

5. கீழ்கண்டவற்றுள் தவறானது எது?

(அ) தர்மபாலர் சோமபுரியில் பெரியதொரு பௌத்த விகாரையைக் கட்டினார்.

(ஆ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்.

(இ) மகிபாலர் கீதங்கள் வங்காள கிராமப் பகுதிகளில் இப்போதும் பாடப்படுகின்றன.

(ஈ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்.

## பாடம் - 9

1. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக இணைக்கப்படவில்லை?

(அ) மூன்றாம் கோவிந்தன் - வாதாபி

(ஆ) ரவிகீர்த்தி - இரண்டாம் புலிகேசி

(இ) விஷயம் - ராஷ்ட்டிரகூடர்

(ஈ) நம்மாழ்வார் - குருகூர்

www.Padasalai.Net

2. தேர்ந்தெடுத்துப் பொருத்துக.

(i) சிம்மவிஷ்ணு - சாளுக்கியா

(ii) முதலாம் ஜெயசிம்மன் - ராஷ்ட்டிரகூடர் (பல்லவர்)

(iii) முதலாம் ஆதித்தன் - கப்பல் தளம்

(iv) மாமல்லபுரம் - சோழஅரசன்

(அ) 4, 3, 1, 2 (ஆ) 4, 1, 2, 3 (இ) 2, 1, 4, 3 (ஈ) 4, 3, 2, 1

3. காம்போஜம் என்பது நவீன ..................................

(அ) அஸ்ஸாம் (ஆ) சுமத்ரா (இ) ஆனம் (ஈ) கம்போடியா

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. ................................. சமணர்களால் நிறுவப்பட்ட ஒரு மத மையம்

(அ) சரவண பெலகொலா (ஆ) மதுரை (இ) காஞ்சி (ஈ) கழுகுமலை

5. அரச குடும்பம் தொடர்பான சடங்குகளை நடத்துவதற்காகச் சாளுக்கியரால் கட்டப்பட்ட கோயில்கள் எங்கு உள்ளது?

(அ) ஐஹொல் (ஆ) வாதாபி (இ) மேகுடி (ஈ) பட்டடக்கல்

6. அயல்நாட்டு வணிகர்கள் ................................. என்று அறியப்பட்டனர்.

(அ) பட்டணசாமி (ஆ) நானாதேசி (இ) விதேசி (ஈ) தேசி

7. ஆதிசங்கரரால் எடுத்துரைக்கப்பட்ட கோட்பாடு .................................

(அ) அத்வைதம் (ஆ) விசிஷ்டாத்வைதம்

(இ) சைவசித்தாந்தம் (ஈ) வேதாந்தம்

## பாடம் - 10

www.Padasalai.Net

1. 8-ஆம் நூற்றாண்டில் அரபியர் படையெடுப்பின் போது சிந்து அரசர் ......................................... ஆவார்.

(அ) ஹஜ்ஜஜ் (ஆ) முகமது-பின்-காஸிம்

(இ) ஜெய சிம்ஹ (ஈ) தாகிர்

2. கஜினி மாமுது, இந்தியாவுக்குள் ............................................. முறை இராணுவத் தாக்குதல்கள் நடத்தினர்.

(அ) 15 (ஆ) 17 (இ) 18 (ஈ) 19

3. பாலம் பவோலி கல்வெட்டு ................................. மொழியில் இருக்கிறது.

(அ) சமஸ்கிருதம் (ஆ) பாரசீகமொழி (இ) அரபி (ஈ) உருது

4. உலகப் புகழ்ப்பெற்ற கஜூராஹோ கோயிலைக் கட்டியவர்கள் .................................

(அ) ராஷ்டிரகூடர் (ஆ) டோமர் (இ) சண்டேளர் (ஈ) பரமர்

5. மம்லுக் என்ற பெயர் ஒரு ................................. க்கான அரபுத் தகுதிச்சுட்டாகும்.

(அ) அடிமை (ஆ) அரசர் (இ) இராணி (ஈ) படைவீரர்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

6. இப்ன் பதூதா ஒரு .................................. நாட்டுப் பயணி.

   (அ) மொராக்கோ (ஆ) பெர்சியா (இ) துருக்கி (ஈ) சீனா

7. அரசப் பதவியை விடுத்து, தில்லியிலிருந்து விலகி முப்பதாண்டுகள் அமைதியில் வாழ்ந்த ஒரே சுல்தான் ..................................

   (அ) முபாரக் ஷா (ஆ) ஆலம் கான்

   (இ) கிசர் கான் (ஈ) துக்ரில் கான்

8. சரியாகப் பொருத்தி, விடையைத் தெரிவு செய்க.

   1. ராமச்சந்திரா - 1. காகதீய

   2. கான்-இ-ஜஹான் - 2. பத்மாவத்

   3. மாலிக் முஹமத் ஜெய்சி - 3. மான்சிங்

   4. மன் மந்திர் - 4. தேவகிரி

   (அ) 2, 1, 4, 3 (ஆ) 2, 3, 4, 1 (இ) 4, 1, 2, 3 (ஈ) 3, 1, 2, 4

www.Padasalai.Net

## பாடம் - 11

1. ........................................................ கடல்வழிப் படையெடுப்புகள் ஸ்ரீவிஜயா அரசு வரை விரிவடைந்திருந்தன.

   (அ) மூன்றாம் குலோத்துங்கன் (ஆ) முதலாம் இராஜேந்திரன்

   (இ) முதலாம் இராஜராஜன் (ஈ) பராந்தகன்

2. ...................................... படுகையில் இருந்த சோழ அரசின் மையப்பகுதி சோழ மண்டலம் எனப்படுகிறது.

   (அ) வைகை (ஆ) காவிரி (இ) கிருஷ்ணா (ஈ) கோதாவரி

3. முதலாம் இராஜராஜனும் முதலாம் இராஜேந்திரனும் இணைந்து .................................. ஆண்டுகள் சோழ அரசை ஆட்சி செய்தார்கள்.

   (அ) 3 (ஆ) 2 (இ) 5 (ஈ) 4

www.Padasalai.Net www.TrbTnpsc.com



4. ................................... ஒரு கலத்துக்குச் சமம் ஆகும்.

(அ) 28 கி.கி (ஆ) 27 கி.கி (இ) 32 கி.கி (ஈ) 72 கி.கி

5. கெடா ................................... இல் உள்ளது.

(அ) மலேசியா (ஆ) சிங்கப்பூர் (இ) தாய்லாந்து (ஈ) கம்போடியா

6. முதலாம் இராஜராஜனின் ஆட்சியில் மாமல்லபுரம் ......................................... என்று அழைக்கப்பட்ட ஒரு குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

(அ) நாட்டார் (ஆ) மாநகரம் (இ) நகரத்தார் (ஈ) ஊரார்

7. பொருத்துக.

(1) படை முகாம் - படைவீடு

(2) புறக்காவல் படைகள் - தண்டநாயகம்

(3) தலைவர் - நிலைப்படை

(4) படைத்தளபதி - படைமுதலி

(அ) 1, 3, 4, 2 (ஆ) 4, 2, 1, 3 (இ) 2, 1, 3, 4 (ஈ) 1, 4, 2, 3,

www.Padasalai.Net

8. ....................................... இல் பெற்ற வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழபுரத்தைக் கட்டினர்.

(அ) இலங்கை (ஆ) வட இந்தியா (இ) கேரளம் (ஈ) கர்நாடகா

9. ................................... பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்.

(அ) மதுரை (ஆ) காயல்பட்டினம் (இ) கொற்கை (ஈ) புகார்

10. பொ.ஆ. 800-ஐச் சேர்ந்த மானூர் கல்வெட்டு ............................................ நிர்வாகம் குறித்த செய்திகளைத் தருகின்றது.

(அ) மத்திய அரசு (ஆ) கிராமம் (இ) படை (ஈ) மாகாணம்

11. வறட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் பாண்டிய அரசர்கள் ............................... ஐக் கட்டினார்கள்.

(அ) அகழிகள் (ஆ) மதகுகள் (இ) அணைகள் (ஈ) ஏரிகள்

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வரலாறு தொகுதி - I

## இரண்டு மதிப்பெண் விடைக் குறிப்பு

1. **வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் :**

◈ தொல்லியல் சான்றுகளே பெரிதும் உதவுகின்றன. இதற்கு எழுத்து வடிவச் சான்றுகள் ஏதும் இல்லை.

◈ தொல்லியல் ஆய்விடங்கள், நிலவியல் அடுக்குகள், விலங்குகளின் எலும்புகள் மற்றும் அதன் படிமங்கள் உதவுகின்றன.

◈ கற்கருவிகள், எலும்புக் கருவிகள், பாறை ஓவியங்கள், கைவினைப் பொருட்கள் ஆகியன உதவுகின்றன.

---

2. **பழங் கற்காலம் பிரிக்கப்படும் முறை :**

www.Padasalai.Net

◈ வரலாற்றில் மிகவும் தொன்மையான காலம் பழங் கற்காலம் ஆகும்.

◈ பழங் கற்காலம் மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. அவையாவன :

1. கீழ் பழங் கற்காலம்
2. இடைப் பழங் கற்காலம்
3. மேல் பழங் கற்காலம்

---

3. **ஹோமினின் குறிப்பு :**

◈ தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையரே ஹோமினின்.

◈ ஹோமினின் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிகளவில் காணப்படுகின்றன.

◈ இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் உள்ள ஹத்னோராவில் கிடைத்துள்ளது. அதை நர்மதை மனிதன் என குறிப்பிடுகின்றனர்.

---

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**4. இடைக் கற்காலப் பண்பாட்டின் குறிப்பு :**

- ◈ உலகளவில் இடைக் கற்காலப் பண்பாட்டின் காலம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.
- ◈ இந்தியாவில் இப்பண்பாடு ஏறத்தாழ பொ.ஆ.மு. 10,000 வாக்கில் தோன்றியது.
- ◈ கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் இது பொ.ஆ.மு. 1,000 வரை அதாவது இரும்புக் காலத்தின் தொடக்கம் வரை நீடித்தது.

---

**5. ஹரப்பா நாகரிகத்தின் வெவ்வேறு கட்டங்கள் :**

- ◈ ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளது.
- ◈ குறிப்பாக மூன்று படிநிலைகளைக் கொண்டதாக பிரித்தனர். அவையாவன :

1. தொடக்ககால ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 3,000 - 2,600 )
2. முதிர்ச்சி அடைந்த ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 2,600 - 1,900 )
3. பிற்கால ஹரப்பா நாகரிகம் ( பொ.ஆ.மு. 1,900 - 1,700 )

www.Padasalai.Net

---

**6. பெருங்குளம் குறிப்பு :**

- ◈ பெருங்குளம் என்பது முற்றத்துடன் கூடிய ஒரு பெரிய குளமாகும். இதில் கழிவுநீர் வடிகால் வசதியும் இருந்தது.
- ◈ குளத்தின் நான்கு பக்கங்களிலும் உள்ள நடைபாதை வடக்கிலும் தெற்கிலும் படிக்கட்டுகளுடன் அமைந்துள்ளது.
- ◈ நடைபாதை அருகே பல அறைகளும் உண்டு. அதன் சுவர்கள் ஜிப்சம் கலந்த சுண்ணாம்பு சாந்தால் பூசப்பட்டு இருக்கின்றன.

---

**7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :**

- ◈ காலநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி.
- ◈ தொடர் வறட்சியின் காரணமாக ஆறுகள் மற்றும் நீர் நிலைகளின் மறைவு.
- ◈ அயலவர் படையெடுப்பு, வெள்ளப் பெருக்கு, ஆறு தன் போக்கை மாற்றியது.

---

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

8. **வேதகால இலக்கியங்கள் :**

◈ வேதகாலத்தைச் சேர்ந்த ரிக், யஜுர், சாம, அதர்வ வேதங்கள் இந்தியாவின் பழம்பெரும் சமய நூல்களாகும்.

◈ ரிக் வேதம் பழமையானது. யஜுர், சாம, அதர்வ வேதங்கள் சற்றே பிற்காலத்தவை.

◈ பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் ஆகிய நூல்கள் வேதகாலத்தின் இறுதியில் இயற்றப்பட்டவை.

---

9. **ஜென்ட் அவஸ்தா :**

◈ ஜென்ட் அவஸ்தா என்பது ஜொராஸ்டிரிய சமயத்தைச் சேர்ந்த பாரசீக / ஈரானிய நூலாகும்.

◈ இந்தோ - ஈரானிய மொழிகளைப் பேசிய மக்கள் வாழ்ந்த நிலப்பரப்பு மற்றும் அவர்களின் கடவுள்கள் பற்றி கூறுகிறது.

◈ வேத நூல்களின் சமஸ்கிருதச் சொற்களோடு மொழி ஒப்புமை கொண்டுள்ளன.

www.Padasalai.Net

---

10. **தொடக்க வேத காலத்தில் பெண்களின் நிலை :**

◈ தொடக்க வேத காலத்தில் பெண்கள் மரியாதைக்குரிய இடத்தை வகித்தனர்.

◈ பெண்கள் கிராமக் கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கெடுத்தனர்.

◈ பலதார மணமும் மறுமணமும் வழக்கத்தில் இருந்துள்ளது. ஆனால் குழந்தைத் திருமணங்கள் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

---

11. **ரிக்வேதக் கடவுள்கள் :**

◈ ரிக்வேதக் காலத்தில் இந்திரனே மிக முக்கியக் கடவுளாவார். அவர் புரந்தரா என்று அழைக்கப்பட்டார்.

◈ இருளை நீக்கும் கடவுள் சூரியன். நீர்க் கடவுள் வருணா. தாவரங்களின் கடவுள் சோமா. வலிமையின் கடவுள் மாருத்.

◈ உஷா எனும் பெண் கடவுள் விடியலின் கடவுள் ஆவார். அதிதி, பிரித்வி, சினிவளி, ருத்ரா ஆகியோர் ஏனைய கடவுளர்கள்.

---

12. **இந்தியாவின் இரும்புக் காலம் :**

◈ இந்தியாவில் இரும்புக் காலமானது வடக்கிலும் தெற்கிலும் இருவேறு பண்பாட்டைக் கொண்டுள்ளது.

◈ வட இந்தியாவில் (யமுனை சமவெளியில்) ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடாக உள்ளது.

◈ தென் இந்தியாவில் (தமிழகத்தில்) ஈமச் சின்னங்களுடன் கூடிய பெருங்கற்கால பண்பாடாக உள்ளது.

---

13. **நமது ஆய்வுக்கு சான்றாக உள்ள திரிபிடகங்கள் :**

◈ பாலி மொழியிலான பௌத்த சட்டங்களே திரிபிடகங்கள் (மூன்று கூடைகள்) என்று அழைக்கப்பட்டன.

◈ வினய பிடகம் - பௌத்த சமயத் துறவற விதிகளையும், ஒழுக்க விதிகளையும் பற்றி விரிவாகக் கூறுகிறது.

◈ சுத்த பிடகம் - புத்தரின் போதனைகளையும், அபிதம்ம பிடகம் - பௌத்த தத்துவத்தையும் பற்றி கூறுகிறது.

www.Padasalai.Net

---

14. **சார்வாகம் குறிப்பு :**

◈ சார்வாகர் என்பவரின் பெயரால் சார்வாகம் என்று அழைக்கப்படுகிறது.

◈ சார்வாகம் எனும் சொல் இந்திய பொருள் முதல்வாதத்தைக் குறிக்கிறது.

◈ சார்வாகரும், அஜித கேசகம்பளியும் இந்திய பொருள் முதல்வாதத்தை ஒரு முறையான தத்துவ முறையாக உருவாக்கியவர்கள்.

---

15. **மகாவீரருடைய போதனைகளின் மையக் கருத்து :**

◈ மகாவீரருடைய போதனைகள் மும்மணிகள் (திரிரத்தினங்கள்) எனப்பட்டன. அவை நல்ல நம்பிக்கை, நல்ல அறிவு, நல்ல நடத்தை.

◈ துறவிகள் ஐம்பெரும் சூளுரைகளை மேற்கொள்ள வேண்டும் என போதித்தார்.

◈ மகாவீரருடைய போதனைகளின் மையக் கருத்து அகிம்சையை வலியுறுத்தியது.

---

16. தமிழ்நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டினத்தின் முக்கியத்துவம் :

- ◈ பல்லவ அரசன் இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆட்சியில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த கோயில் கட்டப்பட்டது.
- ◈ சீனத்துறவி வு-கிங் நாகப்பட்டினத்தில் உள்ள பௌத்த மடத்தை தரிசிக்க வருகை தந்தார்.
- ◈ முதலாம் இராஜராஜ சோழன் ஆட்சியில் ஸ்ரீவிஜயம் அரசன் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த கோயிலைக் கட்டினார்.

17. ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாடு :

| ஜனபதங்கள் | மகாஜன பதங்கள் |
|---|---|
| ❖ கங்கை சமவெளியின் சிறுநாடுகள் ஜனபதங்கள் என்றழைக்கப்பட்டன. அவற்றில் சில மட்டும் குடியரசுகள். | ❖ நாளடைவில் சில ஜனபதங்கள் பல்வேறு ஜனபதங்களை கைப்பற்றி மகாஜனபதங்களாக மாறின. |
| ❖ ஜனபதங்கள் வளங்களுக்காகவும் அரசியல் மேலாதிக்கம் செலுத்தவும் சண்டையிட்டுக் கொண்டன. | ❖ மகாஜனபதங்கள் ஆனது மக்களை ஆட்சி செய்த பிரதேச முடியரசுகள் உருவானதை பிரதிபலித்தன. |

www.Padasalai.Net

18. பிம்பிசாரர் மகதப் பேரரசை விரிவுபடுத்திய விதம் :

- ◈ பிம்பிசாரர் திருமண உறவுகள் மற்றும் போர்கள் மூலம் மகதப் பேரரசின் எல்லைகளை விரிவுபடுத்தினார்.
- ◈ தனது சகோதரியை கோசல அரசர் பிரசேனஜித்திற்கு மணம் செய்து வைத்து காசியை வரதட்சணையாகப் பெற்றார்.
- ◈ லிச்சாவி, மாத்ரா இளவரசிகளை மணந்தார். அங்கத்தை ராணுவ பலத்தால் இணைத்தார்.

**19. மஹாபத்ம நந்தர் - குறிப்பு :**

- ◈ மகதப் பேரரசின் முதல் நந்த அரசர் மஹாபத்ம நந்தர் ஆவார். இவரது அதிகாரம் எதிரிகளுக்கு அச்சமூட்டியது.
- ◈ சிசுநாக அரசரைக் கொன்று விட்டு மஹாபத்ம நந்தர் அரியணை ஏறினார்.
- ◈ மஹாபத்ம நந்தரைத் தொடர்ந்து அவரது எட்டு புதல்வர்கள் ஆட்சி செய்தார்கள்.

**20. மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையைத் திருப்பித் தரக் காரணங்கள் :**

- ◈ மகா அலெக்சாண்டர், ஹைடாஸ்பஸ் போரில் சிறைபிடிக்கப்பட்ட போரஸின் கண்ணியத்தால் ஈர்க்கப்பட்டார்.
- ◈ அலெக்சாண்டரின் மேலாதிக்கத்தை போரஸ் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அரியணையை திருப்பித் தந்தார்.
- ◈ போரினால் களைப்படைந்த அலெக்சாண்டரின் வீரர்கள் மேலும் முன்னேறிச் செல்ல மறுமறுப்பு தெரிவித்தனர்.

www.Padasalai.Net

**21. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய பண்புகள் :**

- ◈ மையப்படுத்தப்பட்ட அரசில் பேரரசின் எல்லா பகுதிகளிலும் ஒரே மாதிரியான நிர்வாக அமைப்பு நிலவியது.
- ◈ ஒரு சர்வாதிகாரமான மையப்படுத்தப்பட்ட அரசை உருவாக்கினார்கள்.
- ◈ அதிகார வர்க்கத்தை உருவாக்க, இராணுவத்தை நடத்த, நிதி திரட்ட புதிய நிர்வாக அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

**22. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கியச் சான்றுகள் :**

- ◈ கௌடில்யர் - அர்த்தசாஸ்திரம், மெகஸ்தனிஸ் - இன்டிகா ஆகியன மௌரிய நிர்வாக அமைப்பு பற்றி குறிப்பிடுகிறது.
- ◈ விசாகதத்தர் இயற்றிய முத்ராராட்சசம் என்ற நாடக நூலில் உள்ள தகவல்கள்.
- ◈ சமண, பௌத்த இலக்கியங்களிலும், இந்துமத பிராமணங்களிலும் மௌரிய அரசர்களின் குறிப்புகள் உள்ளன.

23. அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்திய வரலாற்றின் திருப்புமுனை :

- ◈ வடமேற்கு இந்தியாவில் பல கிரேக்க குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.
- ◈ சந்திரகுப்த மௌரியர் வடமேற்கில் பல சிறு அரசுகளை கைப்பற்றி இந்தியாவில் முதல் பேரரசை உருவாக்கினார்.
- ◈ இந்தியா - கிரேக்கம் இடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. மேற்கு உலகிற்கு நான்கு வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.

---

24. பண்டமாற்று முறை - விளக்கம் :

- ◈ வணிகத்தில் பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது.
- ◈ சிலர் விலையுயர்ந்த ஆபரணக் கற்களைப் பண்டமாற்றாகக் கொடுத்து மூலப் பொருட்களைப் பெற்றனர்.
- ◈ அம்மூலப் பொருட்களில் பல்வேறு பொருட்கள் தயாரித்து பின்னர் வேறுசில பொருட்களுக்காக பண்டமாற்று செய்தனர்.

www.Padasalai.Net

---

25. மதுரைக் காஞ்சியில் இருந்து நாம் அறிவது :

- ◈ சங்க இலக்கியத் தொகுப்பான பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று மதுரைக் காஞ்சி.
- ◈ மதுரைக் காஞ்சி பகல் நேரக் கடை (நாளங்காடி) மற்றும் இரவு நேரக் கடை (அல்லங்காடி) பற்றி விவரிக்கிறது.
- ◈ கடை வீதிகளைப் பற்றியும் அங்கு விற்பனையாகும் பலவகைப்பட்ட கைவினைப் பொருட்கள் பற்றியும் பேசுகிறது.

---

26. யுவான் - சுவாங் காஞ்சிபுரத்தில் கண்டவை :

- ◈ யுவான் - சுவாங் காஞ்சிபுரத்தில் அசோகரால் கட்டப்பட்ட பல ஸ்தூபிகளைக் கண்டதாக குறிப்பிட்டுள்ளார்.
- ◈ யுவான் - சுவாங் தனது சியூக்கி நூலில் காஞ்சிபுரத்தில் ஆயிரம் பௌத்த மடாலயங்களைக் கண்டார்.
- ◈ காஞ்சிபுரத்தில் பத்தாயிரம் குருமார்களைக் கண்டதாகவும் பதிவு செய்துள்ளார்.

---

**27. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை பற்றி நாம் அறிவது :**

- ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பண்டைய தமிழகத்தின் சேர மரபைச் சேர்ந்த புகழ்மிக்க மன்னன் ஆவார்.
- சங்க நூலான பதிற்றுப்பத்தின் ஆறாவது பத்து இவன் மீது பாடப்பட்டு உள்ளது. இதை பாடியவர் காக்கைப் பாடினியார் ஆவார்.
- நெடுஞ்சேரலாதனுக்கு மகனான சேரல் இரும்பொறையே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற பெயரில் அரியனை ஏறினான்.

---

**28. இந்தியாவை மத்தியத் தரைக்கடல் உலகத்தோடும் மத்திய ஆசியாவோடும் சீனாவோடும் இணைப்பதற்கு இட்டுச் சென்றவை :**

- மௌரியர்கள் வீழ்ச்சியைத் தொடர்ந்து இந்தியா மீது மேற்காசியா, மத்திய ஆசியாவைச் சேர்ந்தவர்கள் படையெடுத்தனர்.
- இந்தோ-கிரேக்கர்கள், சாகர்கள், குஷாணர்கள் ஆகியோர் இந்தியாவின் பெரும் பகுதிகளில் தங்களது ஆட்சியை நிறுவினர்.
- விரிவான வணிகத் தொடர்புகள் மூலம் இந்தியாவை மத்தியத் தரைக்கடல் பகுதிகள், மத்திய ஆசியா, சீனாவோடு இணைத்தனர்.

www.Padasalai.Net

---

**29. சந்திர குப்தருக்கும் செலியுகஸ் நிகேடருக்கும் இடையில் நிகழ்ந்த போரின் விளைவுகள் :**

- போரில் வெற்றி பெற்ற சந்திர குப்தர் செலியுகஸ் நிகேடருடன் ஓர் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார்.
- சிந்து வரை தான் கைப்பற்றிய பகுதிகளை ஒப்படைத்த செலியுகஸ் 500 போர் யானைகளை பரிசாகப் பெற்றார்.
- கிரேக்கர்கள் - மௌரியர்கள் இடையே மண உறவு ஏற்பட்டது. கிரேக்க தூதுவர் மெகஸ்தனிஸ் பாடலிபுத்திரம் அனுப்பப்பட்டார்.

---

**30. யவன என்ற சொல்லின் பொருள் :**

◈ யவன என்ற சொல்லால் இந்தியா முழுவதும் கிரேக்கர்களைக் குறிப்பிட்டனர்.

◈ பாரசீக மொழியில் கிரேக்கர்களைக் குறிக்கும் "யயுனா" எனும் சொல்லில் இருந்து பெறப்பட்டது ஆகும்.

◈ இந்தியாவில் இச்சொல்லானது கலப்பின மக்களை மற்றும் கிரேக்கத்தை சேர்ந்த அயலவர்களை குறிப்பதற்கு பயன்படுத்தினர்.

**31. நாட்டின் வடமேற்கில் ஒரு பெரிய அரசை மினாண்டர் ஆட்சி செய்தார் :**

◈ இந்தோ - கிரேக்க அரசரான மினாண்டர் நாட்டின் வடமேற்கில் ஒரு பெரிய பகுதியை ஆட்சி செய்தார்.

◈ மினாண்டரின் நாணயங்கள் காபூல், சிந்து சமவெளி முதல் மேற்கு உத்திரப் பிரதேசம் வரையில் கிடைத்துள்ளன.

◈ பாஞ்சாலம், மதுரா அரசர்களோடு சேர்ந்து கங்கைப் பகுதியை சூறையாடினார். கலிங்க மன்னன் காரவேலனை முறியடித்தார்.

www.Padasalai.Net

**32. சத்ரபுகள் பற்றி நாம் அறிவது :**

◈ சாகர்கள் தமது ஆட்சியில் சத்ரப்களை மாகாண ஆளுநர்களாக நியமித்தனர்.

◈ சத்ரப்கள் பலரும் மகாசத்ரப்கள் பட்டத்தைச் சூட்டிக் கொண்டு சுதந்திர ஆட்சியாளர்கள் ஆயினர்.

◈ ஜூனாகத் பாறைக் கல்வெட்டை வெளியிட்ட ருத்ரதாமன் புகழ்மிக்க சாக சத்ரப்களில் ஒருவராவார்.

**33. பட்டியல் தயாரித்தல் :**

◈ **இந்தியாவில் இருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் :**

மிளகு, முத்து, தந்தம், பட்டுத் துணிகள், நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமைஓடு, விளாமிச்சை வேர்த் தைலம், இலவங்கப் பட்டை மர இலையான தாளிசபத்திரி, பருத்தித் துணிகள் ஆகியன ஏற்றுமதியாயின.

◈ **ரோமில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் :**

- நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மதுவகைகள் ஆகியன இறக்குமதியாயின.

---

**34. பெருகிவரும் வணிகத்திற்கும் வியாபாரத்துக்குமான வணிகர்களின் பங்களிப்பு :**

◈ வணிகர்கள் கடல் கடந்த வணிகத்தில் ஈடுபட்டனர். வெளிநாடுகளோடு தரை வழியாகவும் வணிகம் செய்தனர்.

◈ வணிகர்கள் எண்ணிக்கை பெருகி சமுதாயத்தில் முக்கியமானோர் ஆயினர்.

◈ குறிப்பிட்ட ஒரு பொருளை மட்டுமே வணிகம் செய்யும் தனித்தனி அங்காடிகள் பெருநகரங்களில் இயங்கின.

---

**35. ஸ்கந்த குப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியல் காலவரிசைப்படி :**

◈ குப்த அரசர்களின் பட்டியல், காலவரிசைப்படி :

www.Padasalai.Net

1. ஸ்ரீகுப்தர் ( பொ.ஆ. 240 - 280 )
2. கடோத்கஜர் ( பொ.ஆ. 280 - 319 )
3. முதலாம் சந்திர குப்தர் ( பொ.ஆ. 319 - 335 )
4. சமுத்திர குப்தர் ( பொ.ஆ. 335 - 375 )
5. இரண்டாம் சந்திர குப்தர் ( பொ.ஆ. 375 - 415 )
6. முதலாம் குமார குப்தர் ( பொ.ஆ. 415 - 455 )
7. ஸ்கந்த குப்தர் ( பொ.ஆ. 455 - 467 )

---

**36. ஹூணர் குறித்து அறிவது :**

◈ ஹூணர்கள் காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இனக் குழுக்கள்.

◈ ஹூணர்கள் ரோமபுரிப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள்.

◈ ஹூணர்களில் ஒரு பிரிவினர் மத்திய ஆசியாவில் இருந்து இந்தியா நோக்கி படையெடுத்து வந்தனர்.

---

**37. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவன :**

- மதுராவில் மக்கள்தொகை அதிகம். அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.
- அரசரது நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் மட்டுமே தானியத்தில் ஒரு பகுதியை அரசருக்கு தரவேண்டும்.
- சூழலைப் பொறுத்து குற்றவாளிகளுக்கு மிதமாகவோ அல்லது கடுமையாகவோ அபராதம் விதிக்கப்பட்டது.

---

**38. பௌத்த அறிஞர்களின் படைப்புகளின் பட்டியல் :**

- தர்க்க அறிவியல் சார்ந்த முதலாவது பௌத்த நூலை வசுபந்து இயற்றினார்.
- வசுபந்துவின் சீடரான திங்கநாதரும், ஆர்யதேவர், ஆர்யஅசங்கர் போன்றோரும் பல அரிய நூல்களைப் படைத்தனர்.
- பௌத்த அறிஞரான சந்திரகோமியர் சந்திரவியாகரணம் என்ற இலக்கண நூலைப் படைத்தார்.

www.Padasalai.Net

---

**39. அலகாபாத் பாறைக் கல்வெட்டு குறிப்பு :**

- சமுத்திர குப்தரின் ஆட்சி, அவரது ஆளுமை, சாதனைகள் பற்றி அலகாபாத் பாறைக் கல்வெட்டு விளக்குகிறது.
- இதனைப் பொறித்தவர் ஹரிசேனர். இது 33 வரிகளில் நாகிரி வரிவடிவத்தில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டன.
- சமுத்திர குப்தரின் படையெடுப்புகள், வெற்றி கொண்ட பகுதிகள், அடிபணிந்த அரசுகள் குறித்த பட்டியலைத் தருகிறது.

---

**40. ஹர்ஷப் பேரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் :**

- மதுபனி செப்புப் பட்டயக் குறிப்புகள்
- சோன்பட் செப்பு முத்திரைக் குறிப்புகள்
- பன்ஸ்கெரா செப்புப் பட்டயக் குறிப்புகள்
- நாளந்தா களிமண் முத்திரைக் குறிப்புகள்

---

41. ஹர்ஷர் கன்னோசியின் மன்னரான விதம் :

- கன்னோசியைச் சேர்ந்தவர்கள் அமைச்சர் போனியின் அறிவுரைப்படி ஹர்ஷரை அரியணையில் அமர அழைத்தனர்.
- ராஜ்புத்திரர், சிலாதித்யா பட்டங்களுடன் ஹர்ஷர் கன்னோசி மன்னரானார்.
- தானேஸ்வரமும் கன்னோசியும் ஒன்றாக இணைந்தன. ஹர்ஷர் தனது தலைநகரை கன்னோசிக்கு மாற்றினார்.

42. முதலாம் மகிபாலரின் சிறப்புகள் குறிப்பு :

- இரண்டாம் விக்கிரம பாலரின் மகனே முதலாம் மஹிபாலர் ஆவார்.
- முதலாம் மஹிபாலரால் பாலர் வம்சத்தின் பெயர் ஓரளவு மீட்டெடுக்கப்பட்டது.
- இராஜேந்திர சோழனின் படையெடுப்பு கங்கையைக் கடக்க முடியாதபடி முதலாம் மஹிபாலரால் தடுக்கப்பட்டது.

www.Padasalai.Net

43. தக்கோலப் போரின் முக்கியத்துவம் :

- இராஷ்டிரகூட அரசர் மூன்றாம் கிருஷ்ணர் ஆட்சிக்கு வந்தவுடன் சோழ அரசின் மீது படையெடுத்தார்.
- பொ.ஆ.949 - ஆம் ஆண்டு நடந்த தக்கோலம் போரில் ராஜாதித்யனின் சோழர் படையை முறியடித்தார்.
- ராமேஸ்வரம் வரை படையெடுத்துச் சென்ற மூன்றாம் கிருஷ்ணர் அங்கு ஒரு வெற்றித் துணை நிறுவினார்.

44. பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக் கழகத்தின் முக்கியத்துவம் :

- நாளந்தா பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு பாலர்கள் ஆதரவு அளித்தனர்.
- நாளந்தா பல்கலைக் கழகம் பௌத்த, சமண, சமஸ்கிருத இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது.
- அதிஷா, சரகர், தான்ஸ்ரீ, ஜினமித்ரர், முக்திமித்ரர், சிலபத்ரர் ஆகியோர் நாளந்தா பல்கலைக் கழகத்தின் முக்கிய அறிஞர்கள்.

**45. திருபுறம்பியம் போரைப் பற்றி நாம் அறிவது :**

- ◈ பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையே திருப்புறம்பியம் என்ற இடத்தில் கடுமையான போர் மூண்டது.
- ◈ பல்லவ அரசன் நந்தி வர்மன் மேலைக் கங்கர் மற்றும் சோழர்களின் ஆதரவோடு பாண்டியர்களை எதிர்த்து போரிட்டான்.
- ◈ இந்த ஸ்ரீபிரம்பியம் போர் / திருபுறம்பியம் போரில் பாண்டியர்கள் தோல்வியுற்றனர்.

**46. ஐஹோல் கல்வெட்டு சிறுகுறிப்பு :**

- ◈ ஐஹோல் கல்வெட்டை எழுதியவர் ரவிகீர்த்தி என்ற கவிஞர். இது சாளுக்கிய அரசர்களைக் குறிக்கும் மெய்கீர்த்தியாகும்.
- ◈ இரண்டாம் புலிகேசியை உண்மையின் உறைவிடம் என்றும் சாளுக்கிய அரச வம்ச வரலாற்றையும் விவரிகிறது.
- ◈ இரண்டாம் புலிகேசி தன் பகைவர்கள் அனைவரையும் குறிப்பாக ஹர்ஷ வர்தனரைத் தோற்கடித்தார் எனக் கூறுகிறது.

www.Padasalai.Net

**47. சாளுக்கியர் காலத்தில் கன்னடத்தில் எழுதப்பட்ட இரண்டு முக்கியமான இலக்கியங்கள் :**

- ◈ வாதாபியில் உள்ள ஒரு சாளுக்கிய கல்வெட்டு கன்னட மொழியை உள்ளூர் பிராகிருதம் என்று குறிப்பிடுகிறது.
- ◈ கவிராஜமார்கம் கன்னட மொழியில் எழுதப்பட்ட முக்கிய இலக்கண நூலாகும்.
- ◈ பம்ப-பாரதம், விக்கிரமார்ஜூன விஜயம் போன்ற இலக்கியங்களும் கன்னட மொழியில் எழுதப்பட்டன.

**48. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பு :**

- ◈ ராமானுஜர் ஒரு சிறந்த ஆசிரியர், சீர்திருத்தவாதி, திட்டமிட்டு செயல்படுபவர். வைணவ மதத்தைப் பரப்பினார்.

- ◈ வைணவத்தின் சமூகத் தளத்தை விரிவடையச் செய்யும் நோக்கில் பிராமணர் அல்லாதோரையும் இணைத்துக் கொண்டார்.
- ◈ வர்ணாசிரம அமைப்புக்கு வெளியே இருந்தோரிடமும் பக்திக் கோட்பாட்டைப் பரப்புவதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

---

**49. கஜினியின் அரசராக மாமுது பதவி ஏற்றல் :**

- ◈ தனது சகோதரன் இஸ்மாயிலைத் தோற்கடித்து 27-வது வயதில் கஜினியின் அரசராக மாமுது பதவி ஏற்றார்.
- ◈ மாமுது கஜினியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதை கலிபா ஒரு பதவியேற்பு அங்கியை அளித்து அங்கீகரித்தார்.
- ◈ மாமுதுக்கு யாமினி-உத்-தௌலா (பேரரசின் வலது கை) என்ற பட்டத்தையும் கலிபா வழங்கினார்.

---

**50. கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள் :**

www.Padasalai.Net

- ◈ ஷாநாமா இயற்றிய பிர்தௌசி, வரலாற்று அறிஞர் உத்பி, கல்வியாளர் அன்சாரி ஆகியோரை கஜினி மாமுது ஆதரித்தார்.
- ◈ கஜினி மாமுதுவுடன் இந்தியா வந்த அல்-பெருனி புகழ்மிக்க கிதாப்-உல்-ஹிந்த் என்ற நூலை இயற்றினார்.
- ◈ அல்-பெருனி அரபு மொழியில் தாரிக்-அல்-ஹிந்த் (இந்திய தத்துவஞானமும் மதமும்) என்ற நூலை எழுதினார்.

---

**51. துருக்கியப் படையெடுப்பின் போது வட இந்தியாவில் ஆட்சியில் இருந்த ரஜபுத்திர வம்சாவளிகள் :**

- ◈ தில்லியில் - டோமர்கள், ராஜஸ்தானில் - சௌகான்கள் ஆட்சி நடத்தினர்.
- ◈ குஜராதில் - சோலாங்கிகள், கன்னோசியில் - கடவாலாகள் ஆட்சி செய்தனர்.
- ◈ மால்வாவில் - பரமர்கள், புந்தேல்கந்தில் - சந்தேலர்கள் ஆட்சி புரிந்தனர்.

இவையே வட இந்தியாவில் ஆட்சியில் இருந்த முக்கிய ரஜபுத்திர அரசுகள் ஆகும்.

---

52. நாற்பதின்மர் அமைப்பு :

- ◈ இல்துமிஷ் நாற்பதின்மர் கொண்ட அமைப்பு ஒன்றை உருவாக்கினார்.
- ◈ இல்துமிஷ் இறந்த பிறகு நாற்பதின்மர் குழு மிகவும் வலிமையானதாக மாறியது.
- ◈ நாற்பதின்மர் அமைப்பு சுல்தானியத்திற்கு பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது எனக்கூறிய பால்பன் அதை ஒழித்தார்.

53. இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக் கருவிகள் :

- ◈ ரபாப், ஸாரங்கி போன்ற இசைக் கருவிகளை இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகம் செய்தனர்.
- ◈ இந்திய இசை உலகிலுள்ள மற்ற இசைகளை விடவும் மேம்பட்டது என்று அமிர் குஸ்ரு அறிவித்தார்.
- ◈ இசையோடு சேர்ந்து காதல் கவிதைகள் பாடுவது இசையை வளர்க்க உதவியது.

www.Padasalai.Net

54. சோழர் காலத்து இலக்கிய வடிவ வரலாற்று நூல்கள் :

- ◈ ஜெயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப் பரணி, இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் கலிங்கப் போர் வெற்றியை கூறுகிறது.
- ◈ ஒட்டகூத்தர் இயற்றிய மூவருலா, மூன்று சோழ அரசர்களின் வரலாற்றை விவரிக்கும் இலக்கியமாகும்.
- ◈ ஒட்டகூத்தர் இயற்றிய மற்றொரு நூல் குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ்.

55. சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்படக் காரணம் :

- ◈ சோழ மண்டலம் என்பது காவிரி ஆற்றின் கழிமுகப் பகுதி. இதுவே சோழ அரசின் மையப்பகுதி ஆகும்.
- ◈ தொண்டை நாடு, பாண்டி நாடு, கங்கைவடி (கர்நாடகம்), மலை மண்டலம் (கேரளம்) வரை சோழப் பேரரசு விரிவடைந்தது.
- ◈ சோழர்கள் வடகிழக்கு இலங்கையை கைப்பற்றினர். எனவே சோழ மண்டலம், மும்முடிச் சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது.

**56. முதலாம் இராஜேந்திரனுக்கான பட்டங்கள் :**

- முதலாம் இராஜேந்திர சோழன் பாண்டியர்களின் மணிமுடியைக் கைப்பற்றி முடிகொண்ட சோழன் என்ற பட்டத்தைப் பெற்றார்.
- வட இந்தியாவில் பெற்ற வெற்றியால் கங்கை கொண்டான் என்ற பட்டம் பெற்றார்.
- இராஜேந்திரனின் கடற்படை ஸ்ரீவிஜயம், கடாரம் பகுதிகளை முறியடித்ததால் கடாரம் கொண்டான் என்ற பட்டம் கிடைத்தது.

---

**57. நிலத்தைக் கணக்கிடுவதற்கான வெவ்வேறு அலகுகள் :**

- சோழ அரசர்கள் முறையாக நிலங்களை அளவீடு செய்து வரி விதித்தனர்.
- நிலத்தை கணக்கிடுவதற்கு குழி, மா, வெளி, பட்டி, பாடகம் முதலிய பல்வேறு அலகுகள் வழக்கில் இருந்தன.
- நில அளவீடு செய்யும் பணியினை செய்தவர்களை "நாடு வகை செய்கிற" என்ற பெயரில் அழைத்தனர்.

www.Padasalai.Net

---

**58. சோழர் காலத்து கால்வாய்களில் அரசர்கள், அரசிகள், கடவுளரின் பெயர்கள் சூட்டப்பட்டவைகள் :**

- உத்தமச் சோழன் வாய்க்கால் - அரசர் பெயரால் அமைந்த சோழர்கால கால்வாய்.
- பஞ்சவன் மாதேவி வாய்க்கால் - அரசி பெயரால் அமைந்த சோழர்கால கால்வாய்.
- கணவதி வாய்க்கால் - கடவுளின் பெயரால் அமைந்த சோழர்கால கால்வாய்.

இவையே சோழர் காலத்தில் கட்டப்பட்ட முக்கிய கால்வாய்கள் ஆகும்.

---

**59. தமிழ் சங்கம் குறிப்பு :**

- இறையனார் அகப்பொருளில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம்பெற்று உள்ளது.
- பல்லவர்களுக்கு முந்தைய இலக்கியங்களில் சங்கம் என்பதன் பொருள் வேறு.
- திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் ஆகிய நூல்களில் சங்கம் என்பது கலைக்கழகம் என்றே குறிக்கப்படுகிறது.

---

**60. பாண்டிய அரசின் மீதான மாலிக் காபூரின் படையெடுப்பின் விளைவுகள் :**

- மதுரையில் தில்லி சுல்தானிய அரசுக்குக் கட்டுப்பட்ட ஓர் அரசு உருவாகியது.
- பாண்டிய அரசகுல உறவினர்களால் பாண்டிய நாடு தனித்தனி அரசுகளாக பிரித்துக் கொள்ளப்பட்டன.
- சொக்கநாதர் கோயிலை இடித்து ஏராளமான விலை மதிப்பிட முடியாத பொருட்களை மாலிக்காபூர் எடுத்துச் சென்றார்.

www.Padasalai.Net

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வரலாறு தொகுதி - I

## மூன்று மதிப்பெண் விடைக் குறிப்பு

**1. அச்சூலியன், சோஹானியன் பண்பாடுகளின் கருவிச் செயல்பாடுகள் :**

**அச்சூலியன் பண்பாடு**

- கைக்கோடாரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் மரபாகும்.
- அச்சூலியன் மரபு பெருமளவில் கோடாரிகள், வெட்டுக் கத்திகளைக் கொண்டது.

**சோஹானியன் பண்பாடு**

- கூழாங் கல்லைச் செதுக்கி உருவாக்காப்படும் கருவிகளைக் கொண்ட மரபு சோஹானியன் மரபாகும்.
- சோஹானியன் மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த கருவிகளையும் மட்டுமே கொண்டது.

---

**2. இந்தியாவின் இடைப் பழங் கற்காலத்தின் முக்கியக் கூறுகள் :**

- இடைப் பழங் கற்கால மக்கள் திறந்த வெளியிலும், குகைகளிலும், பாறைப் படுக்கைகளிலும் வசித்தார்கள்.
- வேட்டையாடுபவர்களாகவும் உணவைச் சேகரிப்பவர்களாகவும் இருந்தார்கள்.
- கருவிகள் சிறியதாயின. கோடாரியைப் பயன்படுத்தும் பழக்கம் குறைந்தது.
- கற்கருவிகள் உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர். ஊதாரணம் - செர்ட், ஜாஸ்பர், குவார்ட்ஸ்.

---

**3. இடைக் கற்கால நாகரிகம் நிலவிய இடங்கள் :**

- இடைக் கற்கால நாகரிகம் ஒருசில பகுதிகள் தவிர இந்தியா முழுவதும் நிலவியது.

1. தமிழ்நாடு - தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள தேரிக் குன்றுகள்.
2. ஆந்திரம் - சனகனகல்லு, 3. கர்நாடகம் - கிப்பன ஹள்ளி,
4. பீகார் - பயிஸ்ரா, 5. குஜராத் - லங்ஜன்,
6. உத்திரப் பிரதேசம் - சாராய் நகர், ராஜ் மகாதக, தம்தமா

---

www.Padasalai.Net

**4. இடைக் கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் :**

- இடைக் கற்கால மக்கள் ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிகக் குடியிருப்புகள் அமைத்து வசித்தார்கள்.
- ஒருசில இடங்களில் குகைகளிலும், திறந்த வெளிகளிலும் வசித்தார்கள். இறந்தோரைப் புதைத்தார்கள்.
- பிம்பட்கா போன்ற இடங்களில் கிடைத்துள்ள சான்றுகளில் இருந்து அவர்களது கலைத் திறனை அறியலாம்.
- சிறிய வகை விலங்குகள் மற்றும் பறவைகளை வேட்டையாடுவதற்கு நுண் கற்கருவிகள் பயன்படுத்தி உள்ளனர்.

---

**5. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகள் :**

- சிந்து நாகரிகம் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் 1.5 மில்லியன் ச.கி.மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.
- சிந்து நாகரிகத்தின் எல்லைகள் :

www.Padasalai.Net

1. கிழக்கு - உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஆலம்கிர்புர்
2. மேற்கு - பாகிஸ்தான், ஈரான் எல்லையின் சட்காஜென் - டோர் குடியிருப்புகள்
3. வடக்கு - ஆப்கானிஸ்தானில் உள்ள ஷார்ட்டுகை.
4. தெற்கு - மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தைமாபாத்.

---

**6. ஹரப்பா பொருளாதாரத்துக்கு பங்களித்த கைவினைத் தயாரிப்புகள் :**

- கைவினைத் தயாரிப்புகள் ஹரப்பா பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கியப் பகுதியாகத் திகழ்ந்தது.
- மணிகள் செய்தல், சங்கு வளையல்கள் செய்தல் மற்றும் உலோக வேலைகள் ஆகிய தொழில்கள் நடைபெற்றன.
- தங்கம், செம்பு, வெண்கலம், சங்கு, பீங்கான் மற்றும் சுடுமண் ஆகியவற்றில் அணிகலன்கள் செய்தனர்.
- கார்னிலியன் (மணிகள்), கிரிஸ்டல் (படிகக்கல்), ஸ்டீட்டைட் (நுரைக்கல்) ஆகியவற்றிலும் அணிகலன்கள் செய்தனர்.

---

7. **ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள் :**

- ◈ இறை நம்பிக்கைக் கொண்டிருந்த ஹரப்பா மக்கள் இயற்கையையும், அரச மரங்களையும் வழிபட்டார்கள்.
- ◈ ஹரப்பா மக்கள் விரிவான நடைமுறைகள்படி இறந்தோரைப் புதைத்தார்கள். எரித்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.
- ◈ தாய் தெய்வம் போன்ற சில சுடுமண் உருவங்களை வழிபட்டார்கள். இறப்பிற்கு பின்னரான வாழ்க்கையில் நம்பிக்கைக் கொண்டிருந்தனர்.
- ◈ புதைகுழிகளில் மட்பாண்டங்கள், அணிகலன்கள், தாமிரக் கண்ணாடி, மணிகள் ஆகியவற்றை வைத்து புதைத்தனர்.

8. **தென் இந்தியாவில் செம்புகாலப் பண்பாடுகள் :**

- ◈ ஒரு முழுமை பெற்ற செம்புகாலப் பண்பாடு தென் இந்தியாவில் நிலவியதற்கு சான்றுகள் கிடைக்கவில்லை.
- ◈ ஒருசில இடங்களில் துளையிட்ட பாண்டங்கள் மற்றும் கெண்டி வடிவிலான பாண்டங்கள் கிடைத்துள்ளன.
- ◈ கல்லிலான கருவிகளை தொடர்ந்து பயன்படுத்தினர். பழங்கள், இலைகள் மற்றும் கிழங்குகளை உண்டு வாழ்ந்தனர்.
- ◈ வேளாண்மையும், கால்நடை வளர்ப்பும் தென் இந்தியாவில் இக்கால மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்கியது.

www.Padasalai.Net

9. **தொடக்க வேதகாலத்தின் புவியியல் பரவல்கள் :**

- ◈ தொடக்க வேதகாலப் பண்பாடு நிலவிய இடங்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் சில பகுதிகளில் பரவி இருந்தது.
- ◈ கிழக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப், மேற்கு உத்திரப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் காணப்பட்டது.
- ◈ தொடக்க வேதகால ஆரியர்கள் வசித்த இடங்கள் பற்றி குறிப்புகள் ரிக் வேதப் பாடல்களில் இடம்பெற்று உள்ளன.
- ◈ தொடக்க வேதகாலப் பண்பாடு பொ.ஆ.மு. 1,500 - 1,000 க்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தது ஆகும்.

10. **ரிக் வேதகால சமூகப் பிரிவுகள் :**

◈ ரிக் வேதத்தில் உள்ள "புருஷசுக்தம்" எனும் பகுதியில் கூறப்பட்டு உள்ளவாறு பல வர்ணங்கள் தோன்றியுள்ளன.

◈ புருஷ பலியிடப்பட்ட போது அவனுடைய வாயிலிருந்து பிராணர்களும், இரண்டு கைகளில் இருந்து சத்திரியர்களும் தோன்றினார்கள்.

◈ அவனுடைய தொடைகளில் இருந்து வைசியர்களும், கால்களில் இருந்து சூத்திரர்களும் தோன்றினார்கள.

◈ தொழில் அடிப்படையில் போர் புரிவோர், மத குருமார்கள், கால்நடை வளர்போர், வேளாண்மை செய்வோர் தோன்றினார்கள்.

---

11. **மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகள் :**

◈ மேய்ச்சல் சமூகத்தின் வாழ்க்கை முறையில் கால்நடைகளை மேய்த்தல் என்பது முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

◈ கால்நடைகளை மையப்படுத்தி மோதல்கள் நடந்தன. சமூகம் இனக் குழுக்கள், மரபுவழிக் குடும்பங்களை கொண்டிருந்தன.

◈ கால்நடை வளர்ப்பு, மேய்ச்சல் தொழில் ஆகியவற்றுக்கு அடுத்த நிலையில் வேளாண்மை முக்கிய இடம் வகித்தது.

◈ வர்ணக் கோட்பாடு தோன்றி இருந்தாலும் மேய்ச்சல் சமூகத்தில் பாகுபாடுகள் ஆழமாக காணப்படவில்லை.

---

13. **காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு :**

◈ ஆரியர்கள் பொ.ஆ.மு. 1000 வாக்கில் கிழக்கு நோக்கி நகர்ந்தபோது அடர்ந்த காடுகளை எதிர் கொண்டார்கள்.

◈ காடுகளைத் திருத்துவதில் இரும்புக் கோடாரிகள், கத்திகள், மண்வெட்டிகள் ஆகியவை முக்கியப் பங்காற்றியது.

◈ இரும்புக் கொழுமுனை கொண்ட கலப்பைகள் காடுகளைத் திருத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்க உதவியது.

◈ மரவேலைகள், கைவினைப் பொருட்கள் செய்ய பயன்பட்ட இரும்புக் கருவிகள் காடுகளைத் திருத்த பேருதவி புரிந்தது.

---

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**14. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள் :**

- வேளாண் உபரி - கங்கைச் சமவெளியில் வேளாண்மை செழித்ததால் உற்பத்தி அதிகரித்து நகரங்கள் தோன்றின.
- கைத்தொழில், மக்கள் தொகை பெருக்கம் - மக்களுக்கு கிடைத்த ஓய்வு நேரம் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவியது.
- வணிக வளர்ச்சி - வேளாண் உபரி, கைவினைப் பொருட்கள் மற்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்ததால் நகரங்கள் தோன்றின.
- ஆடம்பர பாண்டங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர். கழிவுநீர் வடிகால்கள், உறைகிணறுகள் கட்டப்பட்டன.

---

**15. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு வளர்ச்சி பெற்ற நகரங்கள் :**

- இந்திய வரலாற்றில் இரண்டாம் நகரமயமாக்கம் என்பது கங்கைச் சமவெளியில் நகரங்கள் தோன்றியதை குறிப்பிடுகிறது.
- ராஜகிருகம், சிராஸ்வதி, கௌசாம்பி, சம்பா போன்றவை அரசியல் நிர்வாக மையங்களாகத் திகழ்ந்த நகரங்கள்.
- உஜ்ஜையினி, தட்சசீலம் போன்றவை வணிக நகரங்களாக உருவாகி நன்கு வளர்ச்சி பெற்று காணப்பட்டன.
- வைசாலி, புத்தகயா, சாரநாத் போன்ற புகழ்மிக்க நகரங்கள் சிறந்த புனிதத் தலங்களாக வளர்ந்தன.

www.Padasalai.Net

---

**16. பொ.ஆ.மு. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டு அவைதீக சிந்தனையாளர்கள் :**

- பொ.ஆ.மு. ஆறாம் மற்றும் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் அறிவு மலர்ச்சி ஏற்பட்டது.
- கோசலர், கௌதம புத்தர், மகாவீரர், அஜித கேசகம்பளி முதலான அவைதீகச் சிந்தனையாளர்கள் தோன்றினார்கள்.
- ஆன்மா, மனம், உடல் ஆகிய வேதக் கருத்துக்கள் மற்றும் தத்துவங்களை கேள்விக்கு உட்படுத்தினார்கள்.
- அவைதீகச் சிந்தனையாளர்கள் புதிய மதங்களைத் தோற்றுவித்தனர். சமணமும் பௌத்தமும் பிரபலமாயின.

---

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17. **தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கு :**

- ◈ பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தே தமிழ்நாட்டில் சமண சமயம் வேகமாகப் பரவ ஆரம்பித்தது.
- ◈ மதுரை உள்ளிட்ட இடங்களில் சமணத் துறவிகள் தங்கியிருந்த கற்படுக்கைகள் குகைகள் காணப்படுகின்றன.
- ◈ நாலடியார், பழமொழி, சீவக சிந்தாமணி, நீலகேசி போன்றவை தமிழ் மொழியில் இயற்றப்பட்ட சமண நூல்கள்.
- ◈ மேற்கூரை ஓவியங்களுடன் உள்ள திருப்பருத்திக் குன்றம் சமணக் கோயில் சமணக் காஞ்சி என்று அழைக்கப்படுகிறது.

---

18. **தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரிய வரும் நகரப் பண்புகள் :**

- ◈ நகரங்கள் பொதுவாக போக்குவரத்து வசதிக்காக வேண்டி ஆறுகளை ஒட்டி பகுதிகளில் அமைந்திருந்தன.
- ◈ நகரங்கள் அகழிகளால் சூழப்பட்டு இருந்தன. பாதுகாப்பிற்காக கோட்டைச் சுவர்களும் அமைக்கப்பட்டு இருந்தன.
- ◈ நகரங்களில் சாக்கடைகள், உறைகிணறுகள், களிமண் குழிகள், சுகாதாரம் மற்றும் குடிமை வசதிகள் இருந்தன.
- ◈ வீடுகள் செங்கற்களால் கட்டப்பட்டு இருந்தன. நகரங்களில் உறைகிணறுகள், கழிவுநீர்ப் போக்குக் குழிகள் இருந்தன.

www.Padasalai.Net

---

19. **கங்கைச் சமவெளியின் முடியாட்சிகளின் அம்சங்கள் :**

- ◈ போரில் வெல்லப்பட்ட சிறு நாடுகள் மற்றும் இனக்குழுக்களின் கூட்டமைப்புகள் ஆகியவற்றை இணைத்து பேரரசுகள் உருவாகின.
- ◈ பெரிய அரசுகள் உருவாகி அவை சக்ரவர்த்தி அல்லது ஏக்ராட் என்ற உயர்ந்த அரச பதவிகளால் ஆட்சி செய்யப்பட்டன.
- ◈ சர்வாதிகாரமான, ஒரு மையப்படுத்தப்பட்ட பேரரசு உருவாகி சமூக, பொருளாதார, நிர்வாக அமைப்பை மாற்றியது.
- ◈ பிகார், கிழக்கு உத்திரப் பிரதேசம் ஆகிய கங்கைச் சமவெளி பகுதிகளில் ஒரு மையப்படுத்தப்பட்ட பேரரசு உருவானது.

---

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

**20. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்கள் :**

- இந்தியா - கிரேக்கம் இடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. மேற்கு உலகிற்கு நான்கு வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.
- இந்தியத் துணைக் கண்டத்தின் வடமேற்குப் பகுதியில் பல கிரேக்க குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.
- சந்திரகுப்த மௌரியர் வடமேற்கில் பல சிறு அரசுகளை கைப்பற்றி முதல் இந்தியப் பேரரசை உருவாக்கினார்.
- இந்தியாவில் கிரேக்க சத்ரப்புகள் அமைக்கப்பட்டன. கிரேக்க வணிகர்களும் கைவினைக் கலைஞர்களும் இந்தியா வந்தனர்.

---

**21. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நாம் அறிவது :**

- அசோகர் தனது எட்டாவது ஆட்சி ஆண்டில் கலிங்கத்தின் (இன்றைய ஒடிசா) மீது படையெடுப்பு நடத்தினார்.
- இது மகதப் பேரரசில் இருந்து பிரிந்து சென்ற, கலிங்கத்தைத் தண்டிப்பதற்காக தொடுக்கப்பட்ட போர் ஆகும்.
- போரில் பல பத்தாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டனர், காயம் பட்டுப் பின்னர் இறந்தனர், நாடு கடத்தப்பட்டனர்.
- போரில் ஏற்பட்ட அழிவிற்கும் துன்பத்திற்கும் அசோகர் மிகவும் வருந்தினார். பின்னர் பௌத்தராக மதம் மாறினார்.

www.Padasalai.Net

---

**22. மௌரியர் காலத்தில் பரந்த அளவில் நடந்த ஆடை வணிகம் :**

- பருத்தி ஆடைகள் நெய்தல் மற்றும் நூல் நூற்றல் ஆகியன வேளாண்மைக்கு அடுத்த முக்கியத் தொழிலாக இருந்தது.
- முரட்டு ரகம், மெல்லிய ரகம் என பல்வேறு ரகங்களில் பருத்தித் துணிகள் தயாரித்து வணிகம் செய்யப்பட்டன.
- அரசர்களும், அரசவையினரும், தங்க, வெள்ளி ஜரிகை வேலைப்பாடுகள் செய்த ஆடைகளை அணிந்தார்கள்.
- பட்டு பொதுவாக சீனப் பட்டு என்றே அழைக்கப்பட்டது. மௌரியப் பேரரசில் கடல்வழி வணிகம் நடந்ததைக் காட்டுகிறது.

---

**23. இந்தியா மற்றும் மேற்கு, மத்திய ஆசியா இடையில் வணிகம் செய்யப்பட்ட பொருள்கள் - குறிப்பு :**

- ◈ கிரேக்கச் சான்றுகள், இந்தியாவிற்கு மேற்கு உலகத்துடன் இருந்த வணிகத் தொடர்புகளை உறுதி செய்கின்றன.
- ◈ கம்பளி, பட்டு, வாசனை மரக்கட்டை, விலங்குத் தோல், நவரத்தினக் கற்கள் ஆகியன வணிகம் செய்யப்பட்டன.
- ◈ அவுரி (சாயம்), தந்தம், ஆமைஓடு, முத்து, வாசனை திரவியங்கள், அபூர்வ மரக்கட்டைகள் எகிப்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
- ◈ இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ஆடைகள் வணிகத்தில் முக்கிய பங்கு வகித்தது.

**24. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள் :**

- ◈ தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்து முக்கிய திணைகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது.
- ◈ குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த பகுதி. தொழில் வேட்டையாடுதல். முல்லை - காடும் காடு சார்ந்த பகுதி. தொழில் மேய்த்தல்.
- ◈ மருதம் - வயலும் வயல் சார்ந்த பகுதி, தொழில் வேளாண்மை. நெய்தல் - கடலும் கடல் சார்ந்த பகுதி, தொழில் மீன்பிடித்தல்.
- ◈ பாலை - மணலும் மணல் சார்ந்த வறண்ட நிலப்பகுதி, தொழில் திருடுதலும், கொள்ளை அடிப்பதுமே ஆகும்.

**25. சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன் :**

- ◈ இளஞ்சேட்சென்னியின் மகனான கரிகாலன் சங்க கால சோழ அரசர்களில் தலைசிறந்தவன் ஆவான்.
- ◈ கரிகாலன் வெண்ணி போர் களத்தில் சேரரையும், பாண்டியரையும், பதினோரு வேளிர் குலத் தலைவர்களையும் வென்றார்.
- ◈ கரிகாலனின் ஆட்சியை பட்டினப்பாலை விவரிக்கிறது. காவிரியில் அணை கட்டினார். காட்டை வெட்டி நாடாக்கினார்.
- ◈ குளங்கள், வாய்க்கால்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தித் தந்தார். வேளாண்மையை வளரச் செய்தார்.

www.Padasalai.Net

| 11 ஆம் வகுப்பு | வரலாறு | 3 - மார்க் | A . அறிவழகன் - வேலூர் மாவட்டம் |
|---|---|---|---|

**26. கௌதமி புத்திர சதகர்னியின் சாதனைகள் :**

- ◈ சாதவாகன அரசர்களில் மிகவும் புகழ்மிக்க, போற்றத்தக்க பெரும் அரசன் கௌதமிபுத்திர சதகர்னி ஆவார்.
- ◈ சாக அரசர் நாகபனா-வை வென்று அவரது நாணயங்களைத் தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார்.
- ◈ நாசிக் கல்வெட்டு, சாகர், பகல்வர், யவனர்கள் ஆகியோரை இவர் வெற்றி கொண்டதாகக் கூறுகிறது.
- ◈ கௌதமிபுத்திர சதகர்னி தமது சாதனைகளை உயர்த்த அஸ்வமேத யாகத்தை நடத்தியதாக கூறப்படுகிறது.

---

**28. டெமெட்ரியஸுடைய நாணயங்களின் சிறப்பு :**

- ◈ இந்தோ - கிரேக்க அரசர்களின் ஆட்சியை வேறுபடுத்திக் காட்டுகிறது. கிரேக்க வெள்ளி நாணயங்கள் பாணியில் வடிக்கப்பட்டன.
- ◈ ஒரு பக்கத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் அரசரின் உருவத்தையும், பெயரையும் தாங்கி இருந்தன.
- ◈ பல வகையான தலைக் கவசங்களோடு தனித்த முக மற்றும் உடல் கூறுகளைக் கொண்ட அரசர்களின் உருவத்தை காட்டுகின்றன.
- ◈ இவ்வகை நாணயங்களைப் பயன்படுத்தி அரச வம்சாவளிகள் பற்றி உறுதியாக கூறுவது சாத்தியம் ஆயிற்று.

www.Padasalai.Net

---

**29. மினாண்டர் குறித்து நாம் அறிவன :**

- ◈ இந்தோ - கிரேக்க அரசர்களிலேயே நன்கு அறியப்பட்டவர் மினாண்டர். அவர் வட மேற்கு இந்தியாவில் ஆட்சி செய்தார்.
- ◈ பாஞ்சாலம், மதுரா அரசர்களோடு சேர்ந்து கங்கைப் பகுதியைச் சூறையாடினார். கலிங்க அரசர் காரவேலனை வென்றார்.
- ◈ பாடலிபுத்திரத்தை மினாண்டர் வெற்றிகரமாகத் தாக்கிய போதிலும் வெற்றிக் கொள்ளாமல் பின்வாங்கினார்.
- ◈ நாகசேனருடன் பௌத்தம் குறித்த விவாதத்தில் ஈடுபட்டதை மிலிந்த-பின்ஹா என்ற நூலில் குறிப்பிட்டு உள்ளார்.

---

**30. "முற்கால ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கின்றன" - காரணம் :**

◈ ரோமானிய வணிகர்கள் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் நேரடி வணிகத் தொடர்பு வைத்திருந்தனர்.

◈ தென் இந்தியப் பகுதிகளில் உள்ள கடற்கரைகளை எளிதாகச் சென்றடைய முடியும் என்ற சூழல் நிலவியது.

◈ இப்பகுதிகள் கிழக்கு மற்றும் மேற்கு உலகத்தை இணைக்கும் கடல் வழிப் பாதையில் அமைந்துள்ளன.

◈ இப்பகுதிகளில் இருந்த தொடக்க வரலாற்றுக் கால துறைமுகங்கள் கடல் கடந்த வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்தன.

---

**31. "இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது" - விளக்கம் :**

◈ சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் அமைந்திருந்த முசிறி துறைமுகம் மிகவும் பரபரப்பான வணிக மையமாகும்.

◈ முசிறி நகரம் இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக இருந்துள்ளது என சங்கப் பாடல்களில் கூறப்பட்டு உள்ளன.

www.Padasalai.Net

◈ நாட்டின் உள்பகுதிகளில் இருந்து அரிசியை ஏற்றி வந்த படகுகள், திரும்பிச் செல்கையில் மீன்களை ஏற்றிச் சென்றன.

◈ முசிறியில் சந்தைக்கு கொண்டுவரப்பட்ட கருமிளகு மூட்டைகள், கப்பலில் வந்த தங்கத்திற்கு பண்டமாற்று செய்து கொள்ளப்பட்டன.

---

**32. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவம் :**

◈ நகர அங்காடிகள், தரைவழி மற்றும் கடல்வழி வணிகம் ஆகியவற்றில் பணம் பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாக இருந்தது.

◈ பணத்தைக் கொண்டு பொருட்கள் வாங்குவதும் விற்பதும், வரி செலுத்துவதும் மக்களுக்கும் வணிகர்களுக்கும் எளிதாக இருந்தது.

◈ பண்டைய காலத்தில் பணம் என்பது விலை மதிப்புமிக்க தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களாகத் காணப்பட்டன.

◈ நாணயங்களில் செறிந்திருந்த உலோகத்தின் தன்மை, அளவு மற்றும் தரத்திற்கு ஏற்ப பொருட்கள் விற்கப்பட்டன.

---

**33. கிரேக்க - இந்தியத் தொடர்பின் விளைவான பண்பாட்டுத் தாக்கம் - சிறப்புகள் :**

- கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், பாடலிபுத்திரத்தில் உள்ள நினைவுச் சின்னங்களில் இருந்து தெரிய வருகிறது.
- மௌரியப் பேரரசின் விரிவான நிர்வாக அமைப்புக்கு பாரசீகர்கள், கிரேக்கர்கள் நிர்வாக அமைப்பு முறைகளே தூண்டுகோலாகும்.
- மேற்கு இந்தியாவில் இந்தோ - கிரேக்க அரசாட்சிகள் தோன்றியமை, மாறுபட்ட பண்பாட்டின் தாக்கங்களை வலுப்படுத்தின.
- இந்தியப் பண்பாட்டில் ஒரு வேறுபட்ட, தனித்தன்மை கொண்ட கலை சிந்தனைப் போக்கைத் தோற்றுவித்தது.

---

**34. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகள் :**

- குப்தப் பேரரசு தேசம் அல்லது புக்தி எனப்படும் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. இதன் ஆளுநர் - உபாரிகா.
- குப்தப் பேரரசின் மாநிலங்கள் விஷ்யபதி என்ற அதிகாரியின் கீழ் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன.
- மாவட்ட மட்டத்திற்குக் கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன.
- கிராம மட்டத்தில் கிராமிகா, கிராம் அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் இருந்தனர். இவர்களை கிராம மக்களே தேர்ந்தெடுத்தனர்.

www.Padasalai.Net

---

**35. விக்ரமசீலா பல்கலைக்கழகம் - சிறு குறிப்பு :**

- விக்ரமசீலா பல்கலைக் கழகத்தை வங்காளத்தில் ஆட்சி செய்த பாலர் வம்ச அரசரான தர்மபாலர் நிறுவினார்.
- தட்சசீலா, நாளந்தா, விக்ரமசீலா பல்கலைக் கழகங்கள் இந்தியாவின் மிகப்பெரிய தொடக்க காலக் கல்வி நிறுவனங்கள்.
- வேதக் கல்வியின் முறையான வழிமுறைகள் விக்ரமசீலா பல்கலைக் கழகம் நிறுவத் தூண்டுகோலாக இருந்தன.
- பௌத்த, சமண, சமஸ்கிருத இலக்கிய வளர்ச்சிக்கு வழி வகுத்தது. அதிஷா என்பவர் முக்கிய அறிஞராகத் திகழ்ந்தார்.

---

36. குப்தர் காலத்தில் சமண இலக்கியம் வளர்ந்த விதம் :

- குப்தர் காலத்தின் தொடக்கத்தில் சமண நூல்களும் பிராகிருத மொழியிலும் பின்னர் சமஸ்கிருத மொழியிலும் எழுதப்பட்டன.
- குறுகிய காலத்தில் சமணமதம் பல பெரிய அறிஞர்களை உருவாக்கியது. விமலா - சமண இராமாயணத்தை எழுதினார்.
- சமணக் கோட்பாடுகளைப் பரப்ப பல இந்து புராணங்களும், இதிகாசங்களும் சமணமதக் கண்ணோட்டத்தில் மாற்றி எழுதப்பட்டன.
- குப்தர் காலத்தில் சித்தசேன திவாகரா என்பவர் சமணர்களிடையே தர்க்க சாஸ்திரத்திற்கு அடித்தளமிட்டார்.

37. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி :

- சுழியம் என்ற எண்ணையும், பதின்ம இலக்க முறையையும் கண்டுபிடித்தது குப்தர் கால அறிவியல் அறிஞர்களே ஆவர்.
- கணிதம், கோணவியல், அல்ஜீப்ரா ஆகியவற்றைப் பேசும் ஆரியபட்டீயம் என்ற நூலை ஆரியபட்டர் எழுதினார்.
- வராகமிகிரர் வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியன குறித்து எழுதிய நூல் பிருஹத் சம்ஹிதா.
- நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள், மருந்துகள் தயாரிக்கும் முறை ஆகியவற்றைக் கூறுகிறது.

www.Padasalai.Net

38. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்கள் :

- உள்நாட்டுப் பூசல்களும், அரச குடும்பத்தில் நிலவிய கருத்து வேறுபாடுகளும் அதன் வீழ்ச்சிக்குக் காரணமாயின.
- வாகடக அரசரான ஹரிசேனர் மாளவத்தையும் குஜராத்தையும் தாக்கி குப்தர்களிடம் இருந்து கைப்பற்றினார்.
- ஹூணர்கள் படையெடுப்பால் பேரரசின் நிதி நிலைமை மோசமானது. நாட்டின் மீதான குப்தர்களின் பிடி தளர்ந்தது.
- பல சிற்றரசர்கள் உருவாக ஆரம்பித்தனர். குப்தப் பேரரசு பெருமளவு சுருங்கி மகதத்தில் மட்டும்தான் இருந்தது.

**39. ஹர்ஷருக்கும் சீனாவிற்கும் இடையே நிலவிய உறவு :**

- ஹர்ஷர் சீனாவுடன் நல்லுறவு கொண்டிருந்தார். அவரது சமகால டான்ங் (Tang) பேரரசர் டாய் சுங் ஆவார்.
- பொ.ஆ. 643 மற்றும் 647 ஆகிய ஆண்டுகளில் ஹர்ஷரது அரசவைக்கு சீனப் பேரரசர் தூதுக்குழுவை அனுப்பினார்.
- இரண்டாவது முறை வந்த போது ஹர்ஷர் அண்மையில் இறந்ததை அறிந்து சீனத்தூதுவர் மனம் வருந்தினார்.
- சீனத்தூதுவர் ஹர்ஷரது ஆட்சியை அபகரித்த அரசனைச் சிறை பிடித்து சீனாவிற்குக் கொண்டு சென்றார்.

**40. ஹர்ஷருடைய குற்றவியல் நீதித்துறையின் முக்கியத்துவம் :**

- ஹர்ஷரது குற்றவியல் சட்டங்கள் மற்றும் வழக்கு விசாரணைகள் குப்தர்கள் காலத்தைவிட கடுமையானதாக இருந்தன.
- குற்றவியல் வழக்குகளை விசாரித்து நீதி வழங்க மீமாம்சகர்கள் எனப்பட்டோர் நியமிக்கப்பட்டு இருந்னர்.
- நாடு கடத்தப்படுவதும் உடல் உறுப்புகள் வெட்டப்படுவதும் வழக்கமான தண்டனைகளாக இருந்தன.
- சட்ட மீறுபவர்கள் மற்றும் அரசனுக்கு எதிராக சதி செய்பவர்களுக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

www.Padasalai.Net

**41. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள் :**

- எல்லோராவில் உள்ள கைலாசநாதர் குகைக் கோயிலை ராஷ்டிரகூட அரசர் முதலாம் கிருஷ்ணர் கட்டினார்.
- முதலாம் அமோகவர்ஷர் காலத்தியது எனக் கூறப்படும் ஐந்து சமண குகைக் கோயில்கள் எல்லோராவில் அமைந்துள்ளன.
- எலிஃபண்டாவில் உள்ள குகைக் கோயில் எல்லோராவில் அமைந்துள்ள கோயிலைவிடவும் சிறந்ததாகும்.
- எலிஃபண்டாவில் உள்ள நடராஜர், சதாசிவம், அர்த்த நாரீஸ்வரர், மகேஷமூர்த்தி ஆகியோரின் சிலைகள் புகழ்பெற்ற சிற்பங்கள்.

**42. ராஷ்டிரகூடர்கள் கன்னட இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு :**

- ராஷ்டிரகூடர்கள் ஆட்சிக் காலத்தில் கன்னட, சமஸ்கிருத இலக்கியங்கள் மாபெரும் வளர்ச்சி கண்டன.
- அமோகவர்ஷர் இயற்றிய "கவிராஜமார்க்கம்" கன்னட மொழியில் இயற்றப்பட்ட முதல் கவிதையியல் நூலாகும்.
- ஜீனசேனர் சமணர்களின் ஆதிபுராணத்தை எழுதினார். குணபத்ரர் சமணர்களின் மஹாபுராணத்தை எழுதினார்.
- பழங்காலக் கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்கள் - ஆதிகவி பம்பா, கவிச்சக்கரவர்த்தி பொன்னா மற்றும் ரன்னா.

---

**43. ராஷ்டிரகூடர்கள் சமண மதத்திற்கு அளித்த ஆதரவு :**

- முதலாம் அமோகவர்ஷர், இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம் இந்திரர் போன்ற ராஷ்டிரகூட அரசர்கள் சமண மதத்தை ஆதரித்தனர்.
- முதலாம் அமோகவர்ஷர் காலத்தியது எனக் கூறப்படும் ஐந்து சமண குகைக் கோயில்கள் எல்லோராவில் அமைந்துள்ளன.
- முதலாம் அமோகவர்ஷர் ஆதரித்த புகழ்பெற்ற திகம்பர துறவியான ஜீனசேனர் சமணர்களின் ஆதிபுராணத்தை எழுதினார்.
- இரண்டாம் கிருஷ்ணரின் ஆன்மீக வழிகாட்டியாக விளங்கிய குணபத்ரர் சமணர்களின் மஹாபுராணத்தை எழுதினார்.

www.Padasalai.Net

---

**44. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள் :**

- பல்லவர் காலத்தில் அரச பதவியானது தெய்வீக உரிமை என்று கருதப்பட்டது. அமைச்சர் குழு அரசருக்கு உதவியது.
- பல்லவர் காலத்து நீதிமன்றங்கள் அதிகர்ண மண்டபம் என்றும், நீதிபதிகள் தர்மாதிகாரி என்றும் அழைக்கப்பட்டனர்.
- மாநில ஆளுநர்களுக்கு மாவட்ட அளவிலான அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்கி உதவிகள் செய்தனர்.
- கிராமங்களில் மக்கள் பங்குபெறும் மன்றங்கள் இருந்தன. இதன் பொதுக்குழு கூட்டம் ஆண்டிற்கு ஒருமுறை கூட்டப்பட்டது.

---

45. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோயில் :

- ◈ எல்லோராவில் உள்ள கைலாசநாதர் குகைக் கோயிலை ராஷ்டிரகூட அரசர் முதலாம் கிருஷ்ணர் கட்டினார்.
- ◈ எட்டாம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட கைலாசநாதர் கோயில் ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டு உள்ளது.
- ◈ தசாவதாரக் காட்சிகள், கைலாச மலையை ராவணன் அசைப்பது, நடனமாடும் சிவன் போன்ற சிற்பங்கள் உள்ளன.
- ◈ கைலாசநாதர் கோயிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் நன்கு பாதுகாக்கப்பட்டு இன்றளவும் சிறப்புறக் காட்சி தருகின்றன.

46. புகழ்பெற்ற சைவ மூவர்கள் :

- ◈ புகழ்பெற்ற சைவ மூவர்கள் என்பவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவருமே ஆவர்.
- ◈ இம்மூவர் பாடிய பாடல்கள் சைவ சமய நூலான பன்னிரு திருமுறைகளுள் தொகுத்து வைக்கப்பட்டு உள்ளன.
- ◈ பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகளே மூவர் பாடிய தேவாரம் என்று அழைக்கப்படுகிறது.
- ◈ தேவாரம் திருமுறைகளில் முதல் 3 சம்பந்தரும், 4 முதல் 6 வரை நாவுக்கரசரும், 7 - வது சுந்தரரும் பாடியுள்ளனர்.

www.Padasalai.Net

47. தமிழகத்தில் வைணவத்தை பரவலாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு :

- ◈ ஆழ்வார்கள் தமது பாடல்கள் மற்றும் சமயத் தொண்டின் மூலம் வைணவ சமயத்தைப் போற்றி வளர்த்தனர்.
- ◈ கண்ணனின் குழந்தைப் பருவமே திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வார் பாடல்களின் கருவாக இருந்தது.
- ◈ ஆண்டாளின் பாடல்கள் அவர் கண்ணனின் மீது கொண்டிருந்த அளவற்ற காதலை வெளிப்படுத்துகிறது.
- ◈ நம்மாழ்வார் தூத்துக்குடி மாவட்டம் குருகூரைச் சேர்ந்தவர். ஆழ்வார்களில் சிறந்தவரான அவர் திருவாய்மொழி எழுதியுள்ளார்.

48. சாளுக்கியர் ஆட்சியில் அரசகுல மகளிரின் முக்கியத்துவம் :

- ◈ சாளுக்கிய அரசகுல மகளிர் நிர்வாகத்தில் பங்கேற்றனர். கோயில்களுக்குக் கொடை வழங்கினர். பல கோயில்கள் எழுப்பினர்.
- ◈ முதலாம் ஜெயசிம்மனின் வழிவந்த சாளுக்கிய அரசர்கள் அரசகுல பெண்களை மாநில ஆளுநர்களாக நியமித்தனர்.
- ◈ விஜயபத்திரிகா என்னும் பெயரைக் கொண்ட சாளுக்கிய இளவரசி கல்வெட்டு ஆணைகளைப் பிறப்பித்து உள்ளார்.
- ◈ இரண்டாம் விக்கிரமாதித்தன் மனைவி லோகமாதேவி ஆணைப்படி பட்டடக்கல் விருப்பாக்ஷா கோயில் கட்டப்பட்டது.

49. முகமது-பின்-காஸிமின் இராணுவப் படையெடுப்புக்கு உடனடிக் காரணங்கள் :

- ◈ ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜஜ்-பின்-யூசுப், கடல் கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை எனக்கூறி சிந்துவின் மீது படையெடுத்தார்.
- ◈ சிந்துவின் அரசர் தாகிரை எதிர்த்து, தரைவழி, கடல்வழி என இரு தனித்தனி படைப் பிரிவுகளை அனுப்பினார்.
- ◈ ஆனால் இந்த இரண்டு படைப் பிரிவுகளும் தாகிரிடம் தோற்றன. அவற்றின் தளபதிகளும் கொல்லப்பட்டனர்.
- ◈ பிறகு 6000 வீரர்கள் கொண்ட குதிரைப்படை மற்றும் ஒட்டகப் படையை தனது மருமகன் முகமது-பின்-காஸிம் தலைமையில் அனுப்பினார்.

www.Padasalai.Net

50. இந்தியாவில் கஜினி மாமுதின் இராணுவத் தாக்குதல்களுக்கு காரணங்கள் :

- ◈ 32 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கஜினி மாமுது, பதினேழு முறை இந்தியாவின் மீது தாக்குதல்களை நடத்தினார்.
- ◈ செல்வக் களஞ்சியமாகத் திகழ்ந்த இந்து கோயில்களில் கொள்ளை அடிப்பதே கஜினி மாமுதின் தாக்குதல்களுக்கு முதன்மை காரணம்.
- ◈ இந்தியாவில் இருந்த இந்து மதக் கோயில்களை இடிப்பது, சிலைகளைத் தகர்ப்பது போன்ற நடவடிக்கைகள்.
- ◈ கஜினி மாமுது படையினரின் மதப்பற்று - பிற மதத்தினரை வெட்டிக் கொல்வது மற்றும் கோயில்களை அழிப்பது.

**51. ரஸியா சுல்தானா அதிகாரத்தில் இருந்து அகற்றப்படக் காரணம் :**

- ◈ பேரரசர் இல்துமிஷின் மகளான ரஸியா அரியணை ஏறுவதற்கு துருக்கிய பிரபுக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.
- ◈ கையில் வில் அம்புடன், அரச பரிவாரங்கள் சூழ ரஸியா குதிரை மீது சவாரி செய்தார். முகத்துக்கு திரையிடவில்லை.
- ◈ ஜலாலுதீன் யாகுத் என்ற ஓர் அபிசீனிய அடிமையை குதிரை பணித்துறைத் தலைவராக உயர் பதவியில் அமர்த்தினார்.
- ◈ இச்செயல் துருக்கிய பிரபுக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. அரசியைப் பதவியில் இருந்து அகற்ற முயன்றனர்.

---

**52. மாலிக் காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் :**

- ◈ 1307-இல் மாலிக் காஃபூர் தலைமையில் அலாவுதீன் அனுப்பிய பெரும் படை தேவகிரி கோட்டையைக் கைப்பற்றியது.
- ◈ 1309-இல் தெலுங்கானாவில் இருந்த வாரங்கல் பகுதி ஆட்சியாளர் காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா தோல்வியுற்றார்.
- ◈ 1310இல் தோல்வியடைந்த ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன், தனது செல்வங்கள் அனைத்தையும் ஒப்படைத்தார்.
- ◈ தமிழ் நாட்டில் சிதம்பரம், திருவரங்கம் ஆகிய கோயில் நகரங்கள் மற்றும் பாண்டியர் தலைநகரம் மதுரையை சூறையாடினார்.

---

**53. முகமது துக்ளகின் சோதனை முயற்சிகள் தோல்வியடையக் காரணங்கள் :**

- ◈ தமது திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்த வேண்டும் என்ற மனவுறுதி முகமது-பின்-துக்ளக்கிடம் இல்லை.
- ◈ தலைநகரை தௌலதாபாத்துக்கு மாற்றிய பிறகே அங்கிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்பதை உணர்ந்தார்.
- ◈ துக்ளக் அறிமுகப்படுத்திய அடையாள நாணயங்களை போலவே மக்கள் போலி வெண்கல நாணயங்களை அச்சிட்டனர்.
- ◈ தோவாப் பகுதியில் கடும் பஞ்சம் நிலவிய போது வேளாண்மையை விரிவாக்க புதுமையான முயற்சியை மேற்கொண்டார்.

---

www.Padasalai.Net

**54. இராஜராஜ சோழனின் கடல்வழிப் படையெடுப்புகள் :**

- போற்றத்தக்க அரசரான முதலாம் இராஜராஜ சோழன் கடல் கடந்த பேரரசு விரிவாக்க முயற்சியில் ஈடுபட்டார்.
- இராஜராஜனின் கடல் கடந்த படையெடுப்புகள் மேற்குக் கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் வெற்றியைத் தந்தன.
- இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளை கைப்பற்றி அதனை "மும்முடிச் சோழ மண்டலம்" என அழைத்தார்கள்.
- இலங்கை சோழ அரசின் நேரடி கட்டுப்பாட்டில் வந்தது. இந்தியப் பெருங்கடலில் மாலத் தீவுகளைக் கைப்பற்றினார்.

**55. இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான் என அழைக்கப்படக் காரணம் :**

- இராஜேந்திர சோழனின் கடற்படை தென்கிழக்கு ஆசியாவில் இருந்த ஸ்ரீவிஜயா மீது தாக்குதல் தொடுத்தது.
- வலிமையான கடற்படை கொண்டதாகவும் வணிகத்தில் சிறந்ததாகவும் விளங்கிய ஸ்ரீவிஜயா (தெற்கு சுமத்ரா) கைப்பற்றப்பட்டன.
- இதே போன்று குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடாவும் (கடாரம்) ராஜேந்திர சோழனால் தோற்கடிக்கப்பட்டது.
- எனவே கடல் கடந்த படையெடுப்பில் வெற்றி பெற்ற ராஜேந்திரனுக்கு "கடாரம் கொண்டான்" என்ற பட்டம் சூட்டப்பட்டது.

www.Padasalai.Net

**56. சோழர் காலத்தில் இருந்த வணிகக் குழுக்களின் பங்களிப்பு :**

- சோழர் காலத்தில் இருந்த அஞ்சுவண்ணத்தார், மணிக்கிராமத்தார் ஆகிய இரு வணிகக் குழுக்கள் முக்கிய பங்காற்றின.
- அஞ்சுவண்ணத்தார் குழு - கடல்வழி வணிகர்கள். இதில் மேற்கு ஆசியாவின் யூதர்கள், கிறிஸ்தவர்கள், இசுலாமியர்கள் இருந்தனர்.
- மணிக்கிராமத்தார் குழு - உள்நாட்டு வணிகர்கள். கொடும்பாளூர், உறையூர், கோவில்பட்டி, பிரான்மலை நகரங்களில் வசித்தனர்.
- இரு வணிகக் குழுவினரும் ஒன்றாகி, ஐநூற்றுவர், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கினர்.

**57. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள் :**

- ◈ சோழர்கள் நிலங்களை வகைப்படுத்தி, அளவீடு செய்து வரிகள் விதித்தனர். வரிகள் பெரும்பாலும் பொருளாக வசூலித்தனர்.
- ◈ இறை, காணிகடன், இறைகட்டின காணிகடன், கடமை உள்ளிட்ட பல வரிகள் சோழர் காலத்தில் விதிக்கப்பட்டன.
- ◈ குடிமை வரி - குத்தகைக்கு வேளாண்மை செய்தவர்கள் அரசுக்கு மற்றும் நில உடமையாளருக்கு செலுத்திய வரி.
- ◈ அரசர்களும் உள்ளூர்த் தலைவர்களும் 'ஓப்படி' என்ற வரியை வசூலித்தனர். விளைபொருளாக செலுத்திய வரி - "இறைகட்டின நெல்லு" எனப்பட்டது.

**58. சோழர் காலச் சமூகத்தின் படிநிலை :**

- ◈ உயர் நிலையில் பிரம்மதேய குடியிருப்புகளில் வசித்த "பிரம்மதேய-கிழவர்" என்ற நில உடமையாளர்கள் இருந்தனர்.
- ◈ சமூகப்படி நிலையின் அடுத்த இடத்தில் வேளாண் கிராமங்களைச் சேர்ந்த நில உடமையாளர்கள் இடம் பெற்றனர்.
- ◈ 'உழுகுடி' என்ற குத்தகைதாரர்கள் வேளாண் வேலைகளை மேற்கொண்டனர். இவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லை.
- ◈ சமூகப் படிநிலையில் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும் (பணி செய்மக்கள்) அடிமைகளும் இருந்தார்கள்.

www.Padasalai.Net

**59. சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள் :**

- ◈ முதலாம் இராஜேந்திரன் தென் ஆற்காடு பகுதியில் உள்ள எண்ணாயிரத்தில் வேதக்கல்லூரி ஒன்றை நிறுவினார்.
- ◈ இராஜேந்திர சோழனுக்குப் பின்வந்த சோழ அரசர்கள் மேலும் இரு சமஸ்கிருதக் கல்லூரிகளை தொடங்கினார்கள்.
- ◈ 1048-இல் புதுச்சேரிக்கு அருகில் திருபுவனியிலும், 1061இல் செங்கல்பட்டுக்கு அருகில் திருமுக்கூடலிலும் அமைந்தன.
- ◈ இந்த கல்வி மையங்களில் வேதங்கள், தத்துவங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம், ஆகியவை கற்பிக்கப்பட்டன.

**60. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக் கோயில்கள் :**

- தொடக்க காலப் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்ட குடைவரைக் கோயில்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் உள்ளன.
- பிரசித்தி கழுகுமலை, ஆனைமலை, சித்தன்னவாசல் குடைவரைக் கோயில்கள் பாண்டியரால் கட்டப்பட்டவைகள்.
- பிள்ளையார்பட்டி, திருமயம், திருச்செந்தூர், குன்றக்குடி, கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் கட்டப்பட்டு உள்ளன.
- சித்தன்னவாசல் குடைவரைக் கோயில் இளம் கௌதமரால் உருவாக்கப்பட்டது என அங்குள்ள கல்வெட்டு கூறுகிறது.

**61. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டு பயண வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பு :**

- காயல் நகரமானது வணிகம், பண்டமாற்று ஆகியவற்றின் மையம் என வாசாஃப், மற்றும் மார்க்கோபோலோ கூறியுள்ளனர்.
- குதிரைகளில் பாண்டிய அரசர்கள் அதிக முதலீடு செய்தனர் என்று வாசாஃப், மற்றும் மார்க்கோ போலோ கூறியுள்ளனர்.
- வெனீஸ் பயணி மார்க்கோ போலோ காயல் துறைமுகம் முழுவதும் அரேபிய, சீன கப்பல்களால் நிறைந்திருந்தது என்றார்.
- பாண்டியர்களின் நேர்மையான நிர்வாகம், அரசர்கள் பின்பற்றிய பலதார மணம் பற்றி மார்க்கோ போலோ பதிவு செய்துள்ளார்.

www.Padasalai.Net

<u>வாழ்த்துக்களுடன்</u>

12. தொடக்க வேதகால சமூகத்திற்கும் பின் வேதகால சமூகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகள் :

| தொடக்க வேதகால சமூகம் | பின் வேதகால சமூகம் |
|---|---|
| ❖ ஆரியர்கள் ஏனைய மக்களிடம் இருந்து மேம்படுத்திக் காட்டிக் கொண்டனர். நிறம், வகையைச் சுட்டிக்காட்ட வர்ண என்ற சொல் பயன்படுத்தினர். | ❖ வர்ண அடிப்படையிலான சமூகப் படிநிலை ஆழமாகக் காலூன்றியது. சூத்திரர்களுக்கும் கீழாக சில சமூகக் குழுக்கள் வைக்கப்பட்டன. கோத்திரம் என்கிற கோட்பாடு தோன்றியது. |
| ❖ பெண்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தை வகித்தனர். கிராமக் கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கெடுத்தனர். | ❖ சமூகத்தில் பெண்களின் நிலைமை தாழ்ந்தது. பெண் குழந்தைகள் பிரச்சனைகளின் தோற்றுவாய் என கருதப்பட்டனர். |

www.Padasalai.Net

27. கிழார் - வேளிர் இருவருக்கு உள்ள வேறுபாடுகள் :

| கிழார் | வேளிர் |
|---|---|
| ❖ கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்து, பின்னர் நாடு என்ற நிர்வாகப் பிரிவின் தலைவராக மாறியவர். | ❖ மூவேந்தர்களின் வளம் நிறைந்த பகுதிகளுக்கு இடையே இருந்த மலைப்பாங்கான காட்டுப் பகுதியை தங்கள் கட்டுபாட்டில் கொண்டிருந்த குறுநில மன்னராவர். |
| ❖ கிழார் என்போர் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழும் பழங்குடி இனச் சமூகங்களின் தலைவர்கள் ஆவர். | ❖ ஆநிரை கவர்தல் காரணமாக இவர்களிடையே அடிக்கடி போர்கள் மூண்டன. புலவர்கள் மற்றும் ஆடல், பாடல் கலைஞர்களை ஆதரித்தனர். |

## மேல்நிலை முதலாம் ஆண்டு

## வரலாறு தொகுதி - I

## ஐந்து மதிப்பெண் விடைக் குறிப்பு

1. **சிந்து நாகரிகத்தை மையமாகக் கொண்டு கீழ்க்கண்டவை பற்றிய சிறுகுறிப்பு :**

**அ) மட்பாண்டம் செய்தல் :**

◈ நன்கு சுடப்பட்டு இருந்த மட்பாண்டங்கள் அடர் சிவப்பும் கறுப்பும் கலந்த வண்ணம் பூசப்பட்டு இருந்தன.

◈ மட்பாண்டங்கள் மீது இலைகள், மீன்செதில், வடிவியல் கூறுகள், தாவரங்கள், விலங்குகள் போன்ற ஓவியங்களை வரைந்தனர்.

**ஆ) வணிகமும் பரிவர்த்தனையும் :**

◈ க்யூனிபார்ம் கல்வெட்டுக் குறிப்புகள் ஹரப்பா - மெசபடோமியா இடையேயான வணிகத் தொடர்பை குறிப்பிடுகிறது.

◈ கார்னிலியன் மணிகள், வைடூரியம், செம்பு, தங்கம், பலவகைப்பட்ட மரங்கள் மெசபடோமியா பகுதிக்கு ஏற்றுமதியாயின.

**இ) எடைக் கற்களும் அளவீடுகளும் :**

◈ எடையின் விகிதம் இரு மடங்காகும்படி பின்பற்றப்பட்டு உள்ளது. ( உதாரணமாக : 1: 2: 4: 8: 16: 32 ஆகியன )

◈ எடைக் கற்கள் கனசதுர வடிவத்தில், படிகக் கல்லில் செய்யப்பட்டு இருந்தன. இஞ்ச் அளவுகோலை பயன்படுத்தி உள்ளனர்.

**ஈ) முத்திரைகளும் எழுத்துகளும் :**

◈ ஹரப்பா நாகரிகத்தைச் சேர்ந்த ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் ஆகியவற்றாலான முத்திரைகள் கிடைத்துள்ளன.

◈ ஹரப்பா எழுத்து முறையை படித்தறிய முடியவில்லை. போக்குவரத்து பொருட்கள் மீதும் முத்திரைகளை பயன்படுத்தினர்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## 2. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா :

- எழுத்துமுறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் அல்லது கற்காலம் எனப்படுகிறது.
- கற்காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் ஆகிய தென்கிழக்கு ஆசியா முழுவதும் ஒரே பகுதி.
- வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் இந்தியாவில் 10 முதல் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தார்கள்.
- இந்தியாவில் இக்காலகட்டம் கற்காலம், வெண்கலக் காலம், செம்புக் காலம், இரும்புக் காலம் எனப் பிரிக்கின்றனர்.
- மக்கள் பயன்படுத்திய பொருட்கள் அடிப்படையில் ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு எனப் பெயரிட்டனர்.
- நாகரிகம் நிலவியதாக கண்டறியப்பட்ட முதல் இடத்தைக் குறிப்பிடும் வகையில் ஹரப்பா பண்பாடு எனப் பெயர் சூட்டினர்.

www.Padasalai.Net

## 3. கீழ் மற்றும் இடைப் பழங் கற்காலப் பண்பாடுகள் - ஒப்பீடு :

| கீழ்ப் பழங் கற்காலப் பண்பாடு | இடைப் பழங் கற்காலப் பண்பாடு |
|---|---|
| கீழ்ப் பழங் கற்காலக் கருவிகளை சென்னைகருகில் உள்ள பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ் பூட் கண்டறிந்தார். | நெவாசா என்ற இடத்தில் பிரவாரா ஆற்றங் கரையில் H. D. சங்கலியா என்பவர் அடையாளம் கண்டார். |
| பரவல் - சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கம், பல்லாவரம், குடியம், மத்திய பிரதேசத்தில் உள்ள பிம்பெட்கா, கர்நாடகாவில் உள்ள இசாம்பூர் ஆகியன | பரவல் - யமுனை, நர்மதை, கிருஷ்ணா, கோதாவரி, உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் காணப்படுகின்றன. |
| கற்கருவிகள் - கற்களைச் செதுக்கி கோடாரிகள், துண்டாக்கும் கருவிகள், பிளக்கும் கருவிகள் உருவாக்கினர். | கற்கருவிகள் - சுரண்டும் கருவிகள், துளையிடும் கருவிகள், அரம் போன்ற கருவி, செதுக்கும் கத்தி ஆகியன. |

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

**4. கருவித் தொழில்நுட்பத்தில் மேல்பழங் கற்காலம் புதுமையை நிகழ்த்தியது :**

- மனிதர்களின் அறிவாற்றல் திறன்களில் ஏற்பட்ட மேம்பட்ட தன்மை கருவித் தொழில்நுட்பத்தில் புதுமையை நிகழ்த்தியது.
- மேல்பழங் கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளான கத்தி, வாள் போன்றவை வெட்டுவாய் தன்மை கொண்டதாகும்.
- சிறு கற்களினால் செய்யப்பட்ட கருவிகளை அறிமுகம் செய்தனர். எலும்பிலான கருவிகளையும் பயன்படுத்தினர்.
- கற்கருவிகள் உருவாக்க சிலிக்கான் கலந்த மூலப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன.
- கற்களைக் கொண்டு வெட்டும் கருவிகளைச் செய்யும் தொழிற்கூடங்கள் வளர்ச்சி பெற்று காணப்பட்டன.
- எலும்பினாலான கருவிகள் ஆந்திர பிரதேசத்தில் உள்ள கர்நூல் குகைகளில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

www.Padasalai.Net

**5. தொடக்க புதிய கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் :**

- வேளாண்மை, விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகியவற்றின் தொடக்கமாக புதிய கற்காலம் அமைந்தது.
- உணவு தானியங்கள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விநியோகமும் அதிகரித்தன.
- ஆறுகளின் மூலம் படியும் செழிப்பான மண் தானிய உற்பத்தியில் உபரியின் அளவை அதிகரிக்கச் செய்தது.
- பழம்பெரும் நாகரிகங்களின் தோற்றத்துக்கு உபரி உணவு உற்பத்தி மிக முக்கியமான காரணமாகும்.
- தொடக்க புதிய கற்காலத்தில் மட்பாண்டங்கள் செய்யும் தொழில் வளர்ந்தது. நிரந்தர இருப்பிடங்கள் கட்டப்பட்டன.
- இக்காலத்தில் உண்டான பண்பாட்டு வளர்ச்சிகள் மொத்தமாக "புதிய கற்காலப் புரட்சி" என்று அழைக்கப்படுகிறது.

6. **காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரிகத்தின் காலத்தைச் சேர்ந்தது :**

- ◈ காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரிகமும் ஒரே சமகாலத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- ◈ காஷ்மீரில் உள்ள பர்சாஹோமைச் சேர்ந்த புதிய கற்கால மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டனர்.
- ◈ கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு ஆகியவற்றின் விதைகள் அகழாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்டு உள்ளன.
- ◈ செம்பாலான அம்புகளைச் செய்தார்கள். கார்னிலியன் கல் மணிகளாலான அணிகலன்கள் தயார் செய்தார்கள்.
- ◈ சிவப்பு நிற மட்பாண்டங்கள், வண்ணம் பூசப்பட்ட பானைகள் மற்றும் உலோகப் பொருட்கள் ஆகியன பயன்படுத்தினார்கள்.
- ◈ குளிரிலிருந்து காத்துக் கொள்ள துணியில் விலங்குகளின் தோலைச் சேர்த்து தைக்கும் குத்தூசிகள் பயன்படுத்தப்பட்டன.

www.Padasalai.Net

7. **தென்னிந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்கள் மற்றும் அதன் முக்கிய கூறுகள் :**

- ◈ புதிய கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் நிலவியது.
- ◈ கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரா, காவிரி சமவெளிகள் மற்றும் கர்நாடகாவில் - பிரம்மகிரி, மஸ்கி, வடகல்.
- ◈ ஆந்திராவில் - நாகர்ஜுன கொண்டா, ராமாபுரம், வீராபுரம், தமிழ்நாட்டில் - பையம்பள்ளி ஆகிய இடங்களில் நிலவியது.
- ◈ ஒரு சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்திருக்கும் கட்டமைப்பு இந்த இடங்களில் காணப்படுகிறது.
- ◈ இங்கு மெல்லிய சாம்பலும், நுண்ணுயிர்களால் சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் கிடைத்திருக்கிறது.
- ◈ சாம்பல் மேட்டைச் சுற்றிலும் காணப்பட்ட வீடுகளும் புதை குழிகளும் மனித வாழிடங்களுக்கான சான்றுகள் ஆகும்.

8. **ஹரப்பா நாகரிகம் என்று சிந்து நாகரிகம் அழைக்கப்படக் காரணங்கள் :**

◈ வடமேற்கு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு. 3000 ஆண்டுகளில் தோன்றியதே சிந்து நாகரிகம் ஆகும்.

◈ இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால் ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

◈ லாகூரில் இருந்து முல்தானுக்கு ரயில்பாதை அமைக்கும் பணியின் போதுதான் ஹரப்பா நகரம் கண்டறியப்பட்டது.

◈ இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சார்லஸ் மேசன் என்பவர் ஹரப்பாவுக்கு முதன்முதலாக 1826 -இல் வருகை தந்தார்

◈ அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் ஹரப்பா பகுதியில் அதனுடன் தொடர்புடைய ஒரு முத்திரையைக் கண்டெடுத்தார்.

◈ ஹரப்பாவில் ஆய்வுகள் நடத்திட சர் ஜான் மார்ஷல் காரணமாக இருந்தார். 1940 களில் மார்டிமர் வீலர் அங்கு ஆய்வுகள் நடத்தினார்.

www.Padasalai.Net

9. **திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ - சிறப்புகள் :**

◈ பாதுகாப்பு அரண்கள், திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர் வசதி ஆகியன ஹரப்பா நகரங்களின் சிறப்பாகும்.

◈ ஹரப்பா மக்கள் கட்டுமானத்துக்கு சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தி உள்ளனர்.

◈ நகரங்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன. கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களால் திட்டமிட்டு கட்டப்பட்டன.

◈ மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். வீடுகளில் பல அறைகள் இருந்தன.

◈ பெரும் குளத்தின் சுவர்கள் நீர் புகாதபடி ஜிப்சம் செறிந்த சுண்ணாம்பு சாந்தால் பூசப்பட்டு, கழிவுநீர் வடிகால் வசதியுடன் இருந்தது.

◈ சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட வீடுகளும் குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலுடன் காணப்படுகிறது.

10. இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்ட பண்பாடுகள் :

◈ வடஇந்தியாவில் செம்புக் காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டன.

◈ இந்த மட்பாண்டங்கள் சிவப்புநிற அடிப்புறத்தின் மேல் பழுப்பு மஞ்சள் நிறம் கொண்டுள்ளதாக காட்சியளிக்கும்.

◈ பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்களில் ஜாடிகள், கொள்கலன்கள், தட்டுகள், கிண்ணங்கள் ஆகிய வகைகள் உள்ளன.

◈ சிந்து - கங்கை சமவெளியில் காணப்படும் இப்பண்பாடு தொடக்க வேதகாலப் பண்பாடோடு தொடர்புடையது.

◈ செம்பாலான உருவங்களும் ஏனைய பொருள்களும் அதிகம் கிடைப்பதால் "செம்பு பொருட்குவியல் பண்பாடு" எனப்படுகிறது.

◈ கிராமப் பண்பாடு நிலவியதால் மரதட்டிகளின் மேல் களிமண் பூசி கட்டப்பட்ட சுவர்கள், மேற்கூரையுடைய வீடுகள் இருந்தன.

www.Padasalai.Net

11. தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்கள் :

◈ ஆதிச்சநல்லூர் - தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு தாழிகளும் மட்பாண்டங்களும் அதிகமாக உள்ளன.

◈ ஆதிச்சநல்லூர் - ஆணிகள், கல்மணிகள், ஆயுதங்கள், துணி, விலங்குகளின் வெண்கல பொம்மைகள் கிடைத்துள்ளன.

◈ பையம்பள்ளி - வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்காவைச் சேர்ந்த கிராமம். இங்கு 1906 இல் அகழ்வாய்வு நடைபெற்றது.

◈ பையம்பள்ளி - இங்கு கருப்பு மற்றும் சிவப்புநிற மட்பாண்டங்கள், அதிக அளவு ஈமத் தாழிகள் கண்டறியப்பட்டன.

◈ கொடுமணல் - ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. அண்மைகால அகழ்வாய்வு 2012 இல் நடந்தது.

◈ கொடுமணல் - இங்கு மட்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள் மணிகள், செம்மணிக் கற்கள் கிடைத்துள்ளன.

12. **வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் :**

**அ) தொடக்க வேதகாலம் :**

◈ தொடக்க வேதகால அரசியல் என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும். அதன் தலைவன் ராஜன் (அரசன்).

◈ அரசருடைய முக்கியப் பணி இனக்குழுவைக் காப்பது, எதிரிகளோடு போரிடுவது. சேனானி என்பவரே படைத் தளபதி.

◈ தொடக்க வேத காலத்தில் சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள் அரசியலில் பங்கேற்றன.

**ஆ) பிந்தைய வேதகாலம் :**

◈ பிந்தைய வேத காலத்தில் அரசன் வாஜ்பேய, ராஜசூய, அஸ்வமேத யாகங்களை நடத்தினார். முடியாட்சி முறை வலுப்பெற்றது.

◈ பேரரசுகள் தோன்றியதால் சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள் அரசியலில் செல்வாக்கு இழந்தன.

www.Padasalai.Net

---

13. **பொ.ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் :**

◈ அரசுகள் உருவாக்கமும், வேத மதத்தின் கடுமையும் மனிதனின் சிந்தனை மற்றும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தின.

◈ வேத மதத்தின் நடைமுறைகளுக்கு எதிரான கிளர்ச்சியாக அறிவு மலர்ச்சி ஏற்பட்டு அவைதீக மதங்கள் உருவாகின.

◈ சமூக அமைப்பு குறித்து அதிருப்தி கொண்டிருந்த மேட்டுக்குடி மக்கள் அவைதீக மதங்களை நோக்கி நகர்ந்தார்கள்.

◈ வேத மதம் சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவவில்லை. எனவே புதிய மதங்களை பின்னற்றுவது கடினமாக இல்லை.

◈ ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கை முறை பிராமணர்களுக்கு மட்டுமே வேதங்களில் அனுமதிக்கப்பட்டு இருந்தது.

◈ நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் காரணமாக புதிய வர்க்கம் உருவாகி தமது பொருளாதார நிலைக்கு ஏற்ற சமூக தகுதியைக் கோரியது.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



14. ஆசீவகம் விளக்கம் - இந்தியாவில் அதன் பரவல் :

- துறவிகள் குழுக்கள் ஒன்றிலிருந்து உருவான ஆசீவகம் பிரிவை நந்தவாச்சா என்பவர் தோற்றுவித்தார்.
- நிர்வாணத் துறவிகளான ஆசீவகர்கள் ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பினார்கள். அவர்களின் தலைமையகம் சிராவஸ்தி.
- ஆசீவகர்களில் தலைசிறந்தவர் மக்காலி கோசலர் ஆவார். ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை நியதி அல்லது விதி.
- ஆசீவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன. அவை: லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம்.
- ஆசீவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும், அப்பிரிவானது நாடு முழுவதும் பரவி இருந்தது.
- குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வ வளமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசீவகத்திற்குள் இருந்தார்கள்.

www.Padasalai.Net

15. சமணத்தில் ஏற்பட்ட பிளவு :

- மகாவீரரின் மறைவிற்கு 500 ஆண்டுகள் கழித்து, சுமார் பொ.ஆ. 79 - 82 இல், சமணத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது.
- மகதம் கடும்பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது. பத்ரபாஹு தலைமையில் சில சமணத் துறவிகள் தெற்கு நோக்கிச் சென்றார்கள்.
- உடைகள் எதுவுமின்றி இருந்ததால் இவர்கள் திகம்பரர்கள் (நிர்வாணமானவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.
- மற்ற சமணத் துறவிகள் ஸ்தூலபத்திரர் தலைமையில் மகதத்திலேயே தங்கி சமய நெறிப்படி வாழ்ந்து வந்தார்கள்.
- வெள்ளை ஆடையை உடுத்திய இவர்கள் ஸ்வேதாம்பரர்கள் (வெள்ளை ஆடை உடுத்தியவர்) என்று அழைக்கப்பட்டனர்.
- இந்தப் பிளவு மகதத்தில் சமணத்தைப் பலவீனப்படுத்தியது. ஸ்தூலபத்திரர் பாடலிபுத்திரத்தில் ஒரு பெரிய மாநாட்டை நடத்தினார்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

16. புத்தரின் எண்வழிப் பாதை :

- புத்தர் நான்கு பெரும் உண்மைகளை வெளியிட்டார். அதில் துன்பம் பற்றியும் எண்வழிப் பாதை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- நான்கு பெரும் உண்மைகள் : துன்பம், துன்பத்தின் காரணம், துன்பத்தின் முடிவு, துன்பத்திலிருந்து விடுதலை பெறும்வழி.
- ஆசையே துன்பத்திற்கு காரணம், துன்பத்திலிருந்து விடுதலை பெற எண்வழிப் பாதையைக் கடைபிடிக்க வேண்டும் என்றார்.
- புத்தர் போதித்த எண்வழிப் பாதை என்பது மத்திமப் பாதை என்றும், அட்டாங்க மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது.
- புத்தரின் எண்வழிப் பாதை ( அட்டாங்க மார்க்கம் ) :

1. நல்ல நம்பிக்கை
2. நல்ல ஆர்வம்
3. நல்ல வாய்மை
4. நல்ல செயல்
5. நல்ல வாழ்க்கை
6. நல்ல முயற்சி
7. நல்ல சிந்தனை
8. நல்ல தியானம்

www.Padasalai.Net

---

17. இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் :

- ஹீனயானா, மகாயானா, வஜ்ராயனா, சகஜயானா போன்ற பிரிவுகள் பௌத்த சமயத்தில் தோன்றி உண்மைத் தன்மையை இழந்தது.
- பௌத்த மதச் செய்திகள் ஆரம்பத்தில் பாலி, பிராகிருத மொழிகளிலும் பின்னர் சமஸ்கிருத மொழியிலும் வெளியானது.
- ஹர்ஷ வர்த்தனரின் காலத்துக்குப் பிறகு பௌத்த மதம் அரசர்களின் ஆதரவை இழக்க ஆரம்பித்து வீழ்ச்சி அடைந்தது.
- ஹூணர்கள் படையெடுப்பு - ஹூணர்கள் பௌத்த மதத்தினர் மீது ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்தனர்.
- வேத மதத்தை ஆதரித்த இராஜபுத்திரர்கள் பௌத்த மதத்தினரைத் துன்புறுத்தி கொல்வதில் ஈடுபட்டு வந்தனர்.
- அரேபியர், துருக்கியர் படையெடுப்புகள் பௌத்த துறவிகளை இந்தியாவில் இருந்து வெளியேற்றிட பெரும் பங்காற்றியது.

---

**18. மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகள் :**

- மௌரிய அரசர்கள் பற்றிய குறிப்புகள் சமண, பௌத்த இலக்கியங்களிலும், பிராமணங்களிலும் இடம்பெற்று உள்ளன.
- இலங்கையில் கிடைத்த, பாலி மொழி நூலான மகாவம்சம் என்ற வரலாற்றேடு ஒரு முக்கிய கூடுதல் ஆதாரம் ஆகும்.
- அலெக்சாண்டரின் படையெடுப்பைத் தொடர்ந்து, இந்தியா பற்றி எழுதிய கிரேக்க வரலாற்று அறிஞர்களின் பதிவுகள்.
- தொல்லியல் சான்றுகள் - நகரத்தின் அமைப்பு, கட்டுமானங்கள், உலோகங்கள், கருவிகள் மூலம் பண்பாடு பற்றி அறிய முடிகிறது.
- அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் - நாட்டின் பல பகுதிகளில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் மௌரிய காலத்தைச் சேர்ந்தவை.
- குஜராத்தில் கிர்நார்-க்கு அருகில் ஜுனாகத்தில் உள்ள பாறைக் கல்வெட்டு. மேலும் விசாகதத்தர் எழுதிய முத்ராராட்சசம்.

www.Padasalai.Net

**19. மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகள் :**

- நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர். மௌரியத் தலைநகர் பாடலிபுத்திரம் நேரடியாக அரசனால் நிர்வகிக்கப்பட்டது.
- அரசருக்கு உதவியாக ஒரு மதகுரு, அமைச்சரவை, மஹாமாத்திரியர்கள் என்ற செயலாளர்கள் ஆகியோர் இருந்தனர்.
- மௌரிய அரசுப் பகுதிகள் நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் பிரதிநிதிகளால் (இளவரசர்கள்) ஆளப்பட்டன.
- எல்லா பகுதியிலும் ஒரே மாதிரியான வருவாய் மற்றும் நீதி நிர்வாகம் நிலவியது. வரி வசூலுக்கு பொறுப்பானவர் சமஹர்த்தா ஆவார்.
- எல்லா முக்கிய நகரங்களிலும் தர்மஸ்தியா, கந்தகோசந்தனா என்ற இருவகை நீதிமன்றங்கள் இருந்தன.
- மௌரியப் பேரரசு நிர்வாக வசதிக்காக மாகாணங்கள், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் என்று பிரிக்கப்பட்டன.

## 20. இந்தியாவின் மீது பாரசீகர்களின் தாக்கம் :

- பாரசீகப் பேரரசின் கீழ் வந்த இந்தியாவின் வடமேற்குப் பகுதி பாரசீக மற்றும் இந்தியப் பண்பாடுகளின் சங்கமமாக மாறியது.
- பாரசீகத் தொடர்பு பண்டைய இந்தியாவின் கலை, கட்டிடக்கலை, நிர்வாகம், பொருளாதாரம் ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்தியது.
- காந்தாரம் பகுதியில் வளர்ச்சி பெற்ற கரோஷ்டி எழுத்து முறையை அசோகர் தனது கல்வெட்டுகளில் பயன்படுத்தினார்.
- நாணயத்தின் இந்தியச் சொல் 'கார்சா' பாரசீக மொழியில் இருந்தே வந்தது. பாரசீகத்தை பின்பற்றி நாணயங்கள் உருவாகின.
- அசோகர் தூண்களின் உச்சி ஆக்கிமீனைட் பேரரசில் காணப்படும் தூண்களை ஒத்துள்ளன. உதாரணம் - சாரநாத் தூண்.
- பாடலிபுத்திரம் அரண்மனையின் எஞ்சிய தூண்கள் ஆக்கிமீனைட் தலைநகரில் உள்ள மண்டபத் தூண்களை ஒத்திருக்கிறது.

www.Padasalai.Net

## 21. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் :

- அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் மௌரியப் பேரரசு பற்றிய தகவல்களைக் கொண்ட நம்பகமான சான்றுகள் ஆகும்.
- 14 பாறைக் கல்வெட்டுகள், 7 தூண் கல்வெட்டுகள் உட்பட மொத்தம் 33 கல்வெட்டுக் கட்டளைகள் கிடைத்துள்ளன.
- பெரும்பாலும் பிராமி எழுத்து முறையிலும், சிலவற்றை மகதி, பிராகிருதம், கரோஷ்டி எழுத்து முறையிலும் வெளியிட்டார்.
- அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பரவியுள்ள விதம், அவர் ஆட்சி செய்த ஒரு பெரிய பேரரசின் பரப்பளவைக் காட்டுகிறது.
- அசோகரின் இரண்டாவது அரசாணை அவரது பேரரசின் எல்லைக்கு வெளியே இருந்த நிலப்பரப்புகளைக் கூறுகிறது.
- அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றில் அசோகருக்கு இருந்த நம்பிக்கை, மக்கள் நல்வாழ்வு மீதிருந்த அக்கறையைக் கூறுகின்றன.

**22. "சங்க கால அரசியல் முறையானது அரசு உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைமை உரிமையே" - இக்கூற்றுக்கு முன்வைக்கும் காரணங்கள் :**

**ஆதரவாக முன்வைக்கும் காரணங்கள் :**

- சங்க காலத்தில் சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.
- அரசுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாதது. வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.
- ஒரு அரசு உருவாகத் தேவையான வேளாண் வளர்ச்சியும் வேளாண் உபரியும் நாசம் ஏற்படுத்தும் போர்களால் தடுக்கப்பட்டன.

**எதிராக முன்வைக்கும் காரணங்கள் :**

- மருத நிலப் பகுதி வாழ் சமூகத்தில் தோன்றிய வேற்றுமைகள்.
- தங்கள் நிலத்தின் மீது மூவேந்தர்கள் கொண்டிருந்த பற்று மற்றும் செல்வாக்கு. ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்த மேற்கொண்ட போர்கள்.
- வணிகப் பெருவழிகள், மலையகப் பகுதிகள், காவிரிப் பூம்பட்டினம் மற்றும் முசிறி துறைமுகங்களில் வரி வசூலிக்கப்பட்டது.

www.Padasalai.Net

**23. மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பு :**

- மூவேந்தர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டதோடு கிழார்கள் மற்றும் வேளிர்களையும் அடிபணியச் செய்தனர்.
- போருக்காக படை வீரர்களை அணி திரட்டினர். சில போர்களில் வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் நாடினர்.
- மூவேந்தர்களும் புலவர்கள் மற்றும் கலைஞர்களை ஆதரித்தனர். அவர்களை அரசவையிலும் அமர வைத்தனர்.
- மூவேந்தர்கள் தங்களது வலிமையைப் பறைசாற்றிக் கொள்ள வேண்டி சிறப்புப் பட்டங்களைச் சூடிக் கொண்டனர்.
- கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.
- தங்களை ஏனைய மக்களிடம் இருந்தும் வேளிர்குல தலைவர்களிடம் இருந்தும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

**24. களப்பிரர் - யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டில் அறிவன :**

- ◈ சங்க காலத்திற்கும், பல்லவர் மற்றும் பாண்டியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே, தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம்
- ◈ மூவேந்தர்களையும் வீழ்த்திய களப்பிரர்கள் தமிழகத்தில் தோராயமாக, பொ.ஆ. 300 - 600 வரை ஆட்சி செய்தனர்.
- ◈ தமிழ்ப் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள், பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் களப்பிரர்கள் காலத்தில் தோன்றின.
- ◈ பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டு சிவகங்கை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- ◈ இந்த பூலாங்குறிச்சி கல்வெட்டில் சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது.
- ◈ அவர்களது குடும்பம், வம்சாவளி பற்றிய குறிப்பு ஏதுமில்லை. சில அறிஞர்களோ களப்பிர அரசர்கள் என்று கூறுகின்றனர்.

www.Padasalai.Net

**25. சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் :**

- ◈ வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் உள்ளன.
- ◈ உமணர் என்றழைக்கப்பட்ட உப்பு வணிகர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிகம் மேற்கொண்டனர்.
- ◈ சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது.
- ◈ பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது. ரோம தங்க வெள்ளி நாணயங்கள் பரிமாற்றத்திற்கு உதவின.
- ◈ ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த தொலைதூர வணிக நடவடிக்கையைச் சுட்டுகின்றன.
- ◈ ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக் குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென் இந்தியாவிலும் கண்டறியப்பட்டு உள்ளன.

**26. மேற்கு இந்தியாவில் இந்தோ - கிரேக்க அரசர்களின் எழுச்சி வணிக, பண்பாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்தியது :**

- மேற்கு இந்தியாவில் இந்தோ-கிரேக்க அரசர்களின் எழுச்சி எகிப்து வரையில் முறையான வணிகம் நடைபெற உதவியது.
- வட மேற்கு ஆப்கானிஸ்தான் வழியாக தரைவழி வணிகமும்; பாரசீக வளைகுடா, செங்கடல் வழியாக கடல்வழி வணிகமும் நடைபெற்றது.
- முத்துகள், தந்தம், ஆமை ஓடுகள், அவுரிச் சாயம், விளாமிச்சை வேர்த் தைலம், தாளிசபத்திரி ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.
- கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், பாடலிபுத்திரத்தில் உள்ள நினைவுச் சின்னங்களில் இருந்து தெரிய வருகிறது.
- மேற்கு இந்தியாவில் இந்தோ-கிரேக்க அரசாட்சிகள் தோன்றியமை, மாறுபட்ட பண்பாட்டின் தாக்கங்களை வலுப்படுத்தின.
- இந்தியப் பண்பாட்டில் ஒரு வேறுபட்ட, தனித்தன்மை கொண்ட கலைச் சிந்தனைப் போக்கைத் தோற்றுவித்தது.

www.Padasalai.Net

---

**27. கலைக்கும் இலக்கியத்துக்கும் கனிஷ்கர் ஆற்றிய பங்களிப்பு :**

- கனிஷ்கர் ஆதரித்த பௌத்த தத்துவ ஞானிகள் - நாகார்ஜுனர், வசுமித்திரர், பார்ஸ்வர், புத்தசரிதம் எழுதிய அஸ்வகோஷர்.
- கனிஷ்கர் வெளியிட்ட அவரது உருவம் பொறித்த நாணயங்கள் மூலம் உலோக வார்ப்புக் கலையை அறியலாம்.
- மதுரா அருகே உள்ள சிலையில் கனிஷ்கர் வார் பூட்டிய அங்கி, நீண்ட மேலங்கி, காலணிகள் அணிந்து காணப்படுகிறார்.
- சிலை வடிப்புக் கலையில் கிரேக்க தாக்கம் காரணமாக இந்திய - கிரேக்கக் கூறுகள் ஒன்றிணைந்து புதிய முறை உருவானது.
- இந்தோ - கிரேக்க பாணியிலான சிற்பங்களும் கலையும் தோன்றின. கனிஷ்கர் காலத்தில் காந்தாரக் கலை வளர்ச்சி பெற்றது.
- தட்சசீலம் பகுதிகளில் புத்தரது சிலைகளும், மதுரா அருகே செம்மணற் கல்லில் நுட்பமாக பல சிற்பங்களும் செதுக்கப்பட்டன.

28. மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதம் :

- ◈ பொ.ஆ. தொடக்கத்தில் ஏற்பட்ட இரு முக்கிய வளர்ச்சி, ஐரோப்பிய - இந்திய வணிகத்தின் வரையறைகளை மாற்றியது.
- ◈ கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலழுந்தது.
- ◈ ரோமானியக் குடியரசானது பொ.ஆ.மு. 27-இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு மாபெரும் பேரரசாக மாறியது.
- ◈ ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் கிடைத்த வெற்றிகளால் ரோமானிய அரசு உலகின் பெருஞ்சக்தியாக வளர்ந்தது.
- ◈ இந்த வெற்றிகள் மூலம் மிகப் பெரும் செல்வங்களைக் குவித்திருந்த ரோம்தான் செல்வ செழிப்பு மிக்க நகரமாகும்.
- ◈ ரோமின் செல்வச் செழிப்பு, தமிழ் நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் துணி வகைகளின் தேவையை அதிகரித்தது.

www.Padasalai.Net

29. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் :

- ◈ வட இந்தியாவில் நிகழ்ந்து வந்த அரசியல் மாறுதல்களால் தென் இந்தியாவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை.
- ◈ பொ.ஆ. முதல் நூற்றாண்டில், தமிழ்ப் பகுதியானது அரசியல் ரீதியாக பல சிறு சிற்றரசுகளாகத் துண்டுபட்டு இருந்தது.
- ◈ வஞ்சியில் சேரர்கள், உறையூரில் சோழர்கள், மதுரையில் பாண்டியர்கள் என மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர்.
- ◈ பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே மௌரிய அரசர்கள் தமிழ் மூவேந்தர்கள் குறித்து அறிந்து வைத்திருந்தனர்.
- ◈ அசோகரின் 2-வது பாறைக் கல்வெட்டாணை தனது பேரரசின் எல்லையில் இருந்த அரசுகள் எனக் குறிப்பிடுகிறது.
- ◈ தமிழ் மூவேந்தர்கள் தவிர சிறிய பகுதிகளை ஆட்சி செய்த போர் பிரபுக்களும் சிற்றரசர்களும் (வேளிர்கள்) இருந்தனர்.

30. "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" :

- ◈ குப்த பேரரசு ஒரு பெரும் சக்தியாக உருவாகி, துணைக் கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.
- ◈ குப்த பேரரசு மத்தியில் ஒரு வலுவான அரசாக திகழ்ந்ததால், பல அரசுகள் அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.
- ◈ செயல்திறன் மிக்க வணிகக் குழுகள், கடல் கடந்த வாணிபம் ஆகியவற்றால் குப்த பொருளாதாரம் எழுச்சி கண்டது.
- ◈ கலை, அறிவியல், கல்வி ஆகியவை சிறப்பான வளர்ச்சி பெற்றது. சமஸ்கிருத மொழியில் பல பெரிய நூல்கள் தோன்றின.
- ◈ குப்தர்கள் காலத்தில் கட்டிடக்கலை, சிற்பம், நுண்கலை ஆகியவற்றில் நல்ல பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது.
- ◈ அனைத்து பிரிவு மக்களும் சுதந்திரமாக வாழ்ந்தனர். உயர் வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை உச்சத்தில் இருந்தது.

www.Padasalai.Net

31. குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம், நிலக் குத்தகை முறைகள் :

குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம் :

- ◈ குப்தர் கால நிலங்கள் க்ஷேத்ரா - பயிரிடக்கூடிய நிலம், கிலா - தரிசு நிலம், அப்ரஹதா - காடு அல்லது தரிசு நிலம்.
- ◈ வாஸ்தி - குடியிருக்கத் தகுந்த நிலம், கபடசஹாரா - மேய்ச்சல் நிலம்.

குப்தர் காலத்தில் நிலக் குத்தகை முறைகள் :

- ◈ நிவி தர்மா - அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம்.
- ◈ நிவி தர்ம அக்சயனா - நிரந்தரமான அறக்கட்டளை பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- ◈ அப்ரதா தர்மா - வருவாயைப் பயன்படுத்தலாம். அதை பிறருக்குத் தானம் செய்ய முடியாது. நிர்வாக உரிமையும் இல்லை.
- ◈ பூமி சித்ராயனா - இது தரிசு நிலத்தை முதன் முதலாகச் சாகுபடி நிலமாக மாற்றுபவருக்குத் தரப்படும் உரிமை.

### 32. குப்தர் காலத்து வணிகக் குழுக்களின் பங்கு :

- ◈ கைவினைக் கலைஞர்கள், வணிகர்கள், பெரு வணிக குழுக்கள் பற்றிக் கூறும் செப்பேடுகள், முத்திரைகள் அதிகம் கிடைத்துள்ளன.
- ◈ பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வணிக விரிவாக்கத்தில் வணிகக் குழுக்களின் பங்கு முக்கியமானது.
- ◈ வணிகக் குழுக்கள் தன்னாட்சி அதிகாரம் பெற்றுச் செயல்பட்டன. இவர்களது சட்ட திட்டங்களை அரசும் மதித்தது.
- ◈ கைவினைஞர்கள் குழுக்கள், வங்கியாளர்கள் குழுக்கள், வணிகர்கள் குழுக்கள் எனப் பலவித குழுக்கள் இருந்தன.
- ◈ பலவித குழுக்களைக் கொண்ட குழும அமைப்புகள் இயங்கின. வணிகக் குழுக்கள், வங்கிகளின் பங்கினை ஆற்றியது.
- ◈ வணிகக் குழுக்களும் குழுமங்களும் பயணிகள் நிழல் குடைகள், சத்திரங்கள், விடுதிகள், கோயில்கள், தோட்டங்கள், மண்டபங்கள் கட்ட உதவின.

www.Padasalai.Net

### 33. ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் :

- ◈ ஹர்ஷர் அரசர்களுக்கு சரணடையவோ அல்லது போரிடவோ வாய்ப்பளித்து இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பினார்.
- ◈ ஹர்ஷர் அருகில் இருந்த சிற்றரசுகளின் பலவீனத்தை அறிந்து அவற்றின் மீது படையெடுத்து தன் பேரரசோடு இணைத்தார்.
- ◈ மாளவ அரசன் தேவ குப்தனைக் கொன்ற ஹர்ஷர் தீக்குளிக்க முயன்ற தனது சகோதரியைக் காப்பாற்றினார்.
- ◈ வங்காளத்தின் கௌட அரசன் சசாங்கனை வீழ்த்திய ஹர்ஷர் தலைநகரை தானேஸ்வரத்தில் இருந்து கன்னோசிக்கு மாற்றினார்.
- ◈ வல்லபியை ஆண்ட மைத்ரகர்கள் புரோச் பகுதியை ஆண்ட கூர்ஜரர்கள் ஆகிய அரசர்களை ஹர்ஷர் வெற்றி கொண்டார்.
- ◈ சிந்து, நேபாளம், காஷ்மீர், மகதம், ஒத்ரா, கொங்கோடா ஆகிய பகுதிகளின் அரசர்களை ஹர்ஷர் வெற்றி கொண்டார்.

**34. ஹர்ஷரின் சமயக் கொள்கைகள் :**

- ஹர்ஷர் சிவனை வழிபட்டார். தங்கை ராஜ்யஸ்ரீ, சீனப் பயணி யுவான் சுவாங் முயற்சியால் பௌத்த மதத்தைத் தழுவினார்.
- எல்லா மதங்களையும் ஆதரித்தார். அம்மதங்களைச் சேர்ந்த அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார்.
- ஹர்ஷர் பொ.ஆ. 643-இல் இரண்டு பௌத்த மதக் கூட்டங்களைக் கூட்டினார். மாமிசம் உண்பது தடை செய்யப்பட்டன.
- கன்னோசி கூட்டத்தில் இருபது அரசர்களும், பௌத்தம், சமணம், வேதம் கற்ற பல மாநில அறிஞர்களும் பங்கேற்றனர்.
- ஹர்ஷர் ஐந்தாணடுகளுக்கு ஒரு முறை மகாமோட்ச பரிஷத் என்ற பௌத்த மதக் கூட்டத்தை பிரயாகையில் கூட்டினார்.
- ஹர்ஷர் தான் சேகரித்த செல்வத்தை பௌத்த மதத்தினர், வேத அறிஞர்கள், ஏழைகள் ஆகியோருக்கு பகிர்ந்து அளித்தார்.

www.Padasalai.Net

**35. வடஇந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் :**

- பயணிகளின் இளவரசன் எனப்படும் யுவான் சுவாங் வட இந்தியாவின் நிலை குறித்து சி-யூ-கி நூலில் விவரித்துள்ளார்.
- மக்களுக்கு முழு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. வேறுபட்ட மதத்தினர் இடையே சமூக நல்லிணக்கம் நிலவியது.
- சமூகத்தில் நான்கு பிரிவினருக்கான தொழில்கள், திருமண முறைகள், பெண்கள் முகத்திரை அணியும் வழக்கம் பற்றி கூறியுள்ளார்.
- மக்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். பருத்தி, பட்டு ஆடைகள் மற்றும் அணிகலன்களை இருபாலரும் அணிந்தனர்.
- இந்தியர்கள் பெரும்பாலும் மரக்கறி உணவுப் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். இறைச்சி உண்பது தடை செய்யப்பட்டன.
- இந்திய நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் அமைப்பு, அழகு, பாதுகாப்பு நடைமுறைகள் பற்றி விவரிக்கிறார்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

### 36. பௌத்த மதத்திற்கு பாலர்கள் ஆற்றிய பங்களிப்பு :

- வங்காளத்தில் ஆட்சி செய்த பாலர் வம்சத்து அரசர்கள் பௌத்த மதத்தின் மகாயானப் பிரிவை ஆதரித்தனர்.
- சிறந்த அரசரான தர்மபாலர் தனது ஆன்மீக குரு ஹரிஷ்பத்ரர் என்ற பௌத்த மதத் தத்துவ ஞானியை ஆதரித்தார்.
- தர்மபாலர் பிகாரில் விக்ரமசீலா பௌத்த மடாலயத்தையும் சோமபுரியில் ஒரு பெரிய பௌத்த விகாரையும் நிறுவினார்.
- தேவபாலர் நாளந்தா பௌத்த மடாலயத்தைப் பராமரிப்பதற்கு வேண்டி ஐந்து கிராமங்களை கொடையாக வழங்கினார்.
- விக்ரமசீலா, நாளந்தா மடாலயங்கள் பௌத்த மதக் கொள்கைகள் போதிக்கும் சிறந்த கல்வி மையங்களாக விளங்கின.
- முதலாம் மகிபாலர் சாரநாத், நாளந்தா, புத்த கயா ஆகிய இடங்களில் புனித வழிபாட்டுத் தலங்களை உருவாக்கினார்.

www.Padasalai.Net

### 37. ராஷ்டிரகூடர்களின் சிறப்புகள் :

- ராஷ்டிரகூடர்கள் சிவன் மற்றும் விஷ்ணு வழிபாடு, சமண மதம் ஆகியவற்றை ஆதரித்தனர். எனவே மத நல்லிணக்கம் நிலவியது.
- ராஷ்டிரகூட ஆட்சியாளர்கள் கல்வியைப் போற்றினார்கள். கன்னட, சமஸ்கிருத இலக்கியங்கள் பெரும் வளர்ச்சி கண்டன.
- ராஷ்டிரகூடர்கள் இந்தியச் சிற்பக் கலைக்கும், ஓவிய கலைக்கும் வியத்தகு பங்களிப்பைச் செய்துள்ளனர்.
- மஹாராஷ்டிராவில் உள்ள எல்லோரா, எலிஃபண்டா குடைவரைக் கோயில்கள் ராஷ்டிரகூடர்கள் கலைக்கு உதாரணம்.
- எல்லோராவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோயிலும் அங்கு தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் சிறப்பானவை.
- முதலாம் அமோகவர்ஷர் கவிராஜ மார்க்கம் என்ற கன்னட நூலை இயற்றினார். கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்கள் தோன்றினர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**38. பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவம் :**

- பல்லவ அரசர்கள், அதிகாரிகளுக்கு வருவாய் மானியமும், பிராமணர்களுக்கு நில மானியமும் வழங்கினார்கள்.
- அரசரது நிலங்கள் குத்தகை விடப்பட்ட கால அளவு பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபடும்.
- 'பிரம்மதேய கிராமங்கள்' ஒரு பிராமணருக்கோ அல்லது பிராமணர்களின் ஒரு குழுவிற்கோ கொடையாக வழங்கப்பட்டன.
- 'பிரம்மதேய கிராமங்கள்' வரி செலுத்த வேண்டியது இல்லை என்பதால் மற்ற கிராமங்களைவிட செழிப்பாக இருந்தன.
- தேவதான கிராமங்கள் கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டன. இதன் வருவாயை கோயில் நிர்வாகிகள் பெற்றனர்.
- கிராமம் சார்ந்த வாழ்க்கையின் மையமாக கோயில்கள் மாறியபோது தேவதான கிராமங்கள் தனி முக்கியத்துவம் பெற்றன.

www.Padasalai.Net

**39. பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகள் :**

- மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகம் நடைபெற்றது.
- வணிகத்தில் நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள், விலை உயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியன ஏற்றுமதி செய்தனர்.
- இலங்கை, சீனா, ஜாவா, சுமத்ரா, கம்போடியா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்தனர்.
- அயல் நாடுகளுக்குச் சரக்குகளைச் சுமந்து சென்ற இந்திய வணிகர்கள் சரக்குகளை வழங்குபவர்களாக மாறினர்.
- மேற்கு கடற்கரையில் மேலைநாடுகள் உடனான வணிகத் தொடர்பில் அராபிய வணிகர்களே முன்னிலை வகித்தனர்.
- மேலைநாடுகள் உடனான வணிகம் சார்ந்த செய்தித் தொடர்பு நேரடியாக இல்லாமல் அராபியாவின் வழியாக அமைந்தது.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

**40. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகள் :**

- ◈ மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கடற்கரைக் கோயில் பல்லவ அரசன் ராஜசிம்மன் ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும்.
- ◈ இந்த கோயில் தென் இந்தியக் கட்டுமானக் கோயில்களில் முதன்மையானது. பல்லவர்களின் அடையாளமாக உள்ளது.
- ◈ இந்த கோயிலில் உள்ள மூன்று கருவறைகளில் முக்கியமானவை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் படைக்கபட்டவை ஆகும்.
- ◈ விஷ்ணு கருவறையின் வெளிச் சுவர் மற்றும் சுற்றுச் சுவர்களில் விரிவாகச் செதுக்கப்பட்ட தொடர் சிற்பங்கள் உள்ளன.
- ◈ மற்ற கோயில்களைப் போலின்றி இக்கோயிலானது பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்டுள்ளது.
- ◈ ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் பல்லவர்கள் கட்டிய மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் சிறப்பாகும்.

---

www.Padasalai.Net

**41. கஜினி மாமுதினுடைய கொள்ளைத் தாக்குதல்கள் மத ஆதிக்கம் என்பதைக் காட்டிலும் அதிகமும் அரசியல், பொருளாதாரத் தன்மை கொண்டவை :**

- ◈ கஜினி மாமுது, இந்தியா மீது 17 முறை தாக்குதல்கள் நடத்தினார். இந்துக் கோயில்களின் செல்வங்களைக் கொள்ளை அடித்தார்.
- ◈ வழிபாட்டு இடங்களைச் சூறையாடுவதும் கடவுள் திருவுருவங்களை அழிப்பதும் அதிகாரத்தின் வெளிப்பாடாக கருதப்பட்டன.
- ◈ கஜினி மாமுது கொள்ளை அடித்தது, பெரும் படையைப் பராமரிக்கிற செலவை ஈடுசெய்யும் தேவையினால் ஏற்பட்டது.
- ◈ துருக்கியப் படை என்பது நிரந்தரமான, தொழில் நேர்த்திப் பெற்றதாகும். அது வில்லாளிகள் பிரிவை மையமாகக் கொண்டது.
- ◈ ஆயுதங்களை வாங்கவும், வில்லாளிகள் மற்றும் படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கவும் கொள்ளைத் தாக்குதல் நடத்தினார்.
- ◈ கஜினி மாமுதுவின் கொள்ளையடிப்புகள் அக்கால அரசர்களின் வழக்கமான கொள்ளையிடும் தன்மையை காட்டுகின்றன.

---

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**42. இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்பு முனையாக அமைந்தது :**

- முதலாவது தரெய்ன் போரில் தோல்வியடைந்த முகமது கோரி 1192-இல் அஜ்மீர் மீது மீண்டும் படையெடுத்தார்.
- கோரியின் ஆற்றலை குறைத்து மதிப்பிட்ட பிருத்விராஜ் சௌகான் ஒரு சிறிய படைக்கு தலைமையேற்றுச் சென்றார்.
- இரண்டாம் தரெய்ன் போரில், கோரிக்கு எதிராக தோல்வியடைந்த பிருத்விராஜ் சௌகான் சிறை பிடிக்கப்பட்டார்.
- அஜ்மீரின் ஆட்சியை மீண்டும் பிருத்விராஜிடம் ஒப்படைத்தார். ஆனால் பின்னர் இராஜதுரோக குற்றம் சாட்டிக் கொன்றார்.
- கோரி தனது நம்பிக்கைக்குரிய தளபதி குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கு துணை ஆட்சியாளராக நியமித்தார்.
- இரண்டாம் தரெய்ன் போரில், முகமது கோரிக்கு கிடைத்த வெற்றி இந்தியாவில் முஸ்லீம்கள் ஆட்சி ஏற்பட வழிவகுத்தது.

www.Padasalai.Net

**43. கஜினி மாமுது - கோரி முகமது ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுதல் :**

| கஜினி மாமுது | கோரி முகமது |
|---|---|
| கஜினியின் அரசனான கஜினி மாமுது துருக்கிய இனத்தைச் சேர்ந்த ஒரு மாபெரும் படையெடுப்பாளர். | கோரியின் அரசனான கோரி முகமது துருக்கிய இனத்தைச் சேர்ந்த ஒரு மாபெரும் படையெடுப்பாளர். |
| கஜினி மாமுது இந்தியாவில் இருந்து செல்வங்களைக் கொள்ளையடிக்கும் நோக்குடன் படையெடுத்தார். | கோரி முகமது இந்தியாவில் ஒரு வலிமையான முஸ்லீம் ஆட்சியை நிறுவும் நோக்குடன் படையெடுத்தார். |
| கஜினி மாமுது இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்தார். அப்போது நடைபெற்ற அனைத்து போர்களிலும் வெற்றி கண்டார். | கோரி முகமது முதல் தரெய்ன் போரில் தோல்வியைத் தழுவினார். ஆனால் இரண்டாம் தரெய்ன் போரில் மாபெரும் வெற்றி கண்டார். |

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

**44. அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் :**

- ◈ அலாவுதீன் கில்ஜி படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான்.
- ◈ ஒரு பெரிய, திறமையான படையைப் பராமரிக்க வேண்டியதால் வீரர்களுக்குக் குறைந்த ஊதியமே அளித்தார்.
- ◈ அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தவே கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களைச் சேகரித்தார்.
- ◈ பொருட்களின் விலை குறித்துச் சந்தை கண்காணிப்பாளர்களும் ஒற்றர்களும் அன்றாடம் அறிக்கை அளித்தல் வேண்டும்.
- ◈ சந்தைகளில் நடந்த கொடுக்கல்-வாங்கல், வாங்குவது, விற்பது, பேரங்கள் பற்றி ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டார்.
- ◈ விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். எடை குறைந்தால் அதே அளவு சதை வெட்டி வீசப்பட்டது.

www.Padasalai.Net

**45. பெரோஸ் துக்ளகின் ஆட்சியை மதிப்பிடுதல் :**

- ◈ பெரோஸ் துக்ளக் பிரபுக்கள், மதத் தலைவர்களிடம் சமரசமாக இருந்தார். அவர்களது சொத்துகளை திரும்பத் தந்தார்.
- ◈ அலுவலர்களைப் பரம்பரையாகப் பணியமர்த்தும் முறையை பெரோஸ் மீண்டும் அறிமுகம் செய்தார். ஊதியத்தை உயர்த்தினார்.
- ◈ அரசு நிதியை வீணாகச் செலவழிக்கவில்லை. பல வரிகளைக் குறைத்தார். பல்வேறு சித்திரவதை முறைகளை ஒழித்தார்.
- ◈ அடிமைகளுக்கு கைவினைத் தொழில்களில் பயிற்சி தரப்பட்டு, அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் பணி அமர்த்தப்பட்டனர்.
- ◈ இசுலாமியர் அல்லாதவருக்கு ஜிஸியா எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தினார்.
- ◈ பல கல்வி நிறுவனங்கள், மசூதிகள், அரண்மனைகள், மற்றும் கோட்டைகள் நிறுவினார். பல கால்வாய்கள் அமைத்தார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**46. தில்லி சுல்தானியத்தின் நிர்வாக அமைப்பு குறித்து விவரணை :**

- தில்லி சுல்தானிய அரசு கலிபாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட முறையான இசுலாமிய அரசாகக் கருதப்பட்டது.
- சுல்தான் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளராக விளங்கினர். இந்தியா முழுவதும் தில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.
- சுல்தான் இராணுவத் துறைத் தலைவர் என்பதால் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைத் தளபதியாக விளங்கினார்.
- சுல்தான் நீதித் துறைத் தலைவர் என்பதால் மேல்முறையீட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்பட்டார்.
- வாரிசுரிமை தொடர்பாக சட்டம் இல்லாத காரணத்தால் சுல்தானிய காலத்தில் வாரிசுரிமைப் போட்டி வழக்கமாக நடந்தது.
- உற்பத்தியில் பாதி நிலவரி ஆகும். இக்தாவின் உடைமையாளரான முக்திகள் என்போர் வரிகள் வசூலித்தனர்.

www.Padasalai.Net

**47. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன :**

- சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் பெற்றது. நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதில் தனிக் கவனம் செலுத்தியது.
- ஆறுகள் இல்லாத பகுதிகளில் குளம், கிணறு, கால்வாய் ஆகிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.
- வடி என்பது வடக்கு தெற்காக நீர் ஓடுவதையும், வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக நீர் ஓடுவதையும் குறிக்கிறது.
- வடி என்பது வடிகாலாக நீரை வெளியேற்றுவதையும், வாய்க்கால் என்பது நீரைக் கொண்டு வருவதையும் குறிக்கிறது.
- ஒரு விளை நிலத்துக்கு வாய்க்கால் வழியே வரும் நீர் வடிக்குத் திருப்பப்பட்டு, மற்றொரு வாய்க்காலுக்குச் செல்லும்.
- நில வருவாய் நிர்வாகத்துக்கு என 'புறவுவரித் திணைக்களம்' என்ற பெயரில் தனியாக ஒரு துறை இயங்கியது.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



48. பின்வருவன குறித்து சிறு குறிப்பு :

1. ஊரார்:

◈ ஊரார் என்போர் வேளாண் குடியிருப்புகள் நிறைந்த ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்ட நிலஉடைமையாளர்கள் ஆவர்.

◈ ஊரார் பணிகள் - கோயில்களை நிர்வகிப்பது, குளங்களைப் பராமரிப்பது, வரி வசூலிப்பது, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது.

2. சபையார்:

◈ சபையார் என்பது பிராமணர்களின் பிரம்மதேயக் குடியிருப்புகள், கோயில்கள், கோயில் சொத்துக்களை நிர்வகிக்கும் சபை ஆகும்.

◈ சபையார் பணிகள் - அரசின் நிர்வாகம், வருவாய், நீதித்துறை சார்ந்த பணிகள். பிரம்மதேயக் குடியிருப்புகளை பராமரிப்பது.

3. நகரத்தார்:

◈ நகரத்தார் என்போர் வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களின் குடியிருப்புகள் நிறைந்த நகரத்தின் பிரதிநிதிகள் ஆவர்.

◈ நகரத்தார் பணிகள் - நகரத்தில் வாழ்ந்த வணிகர்கள், மக்கள் கோயில்களுக்கு வழங்கிய நிதியுதவியை வசூலித்தனர்.

4. நாட்டார்:

◈ நாட்டார் என்பது வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் ஆகும். பல ஊர்களின் தொகுப்பு நாடு.

◈ நாட்டார் பணிகள் - அரசின் நிர்வாகம், வருவாய், நீதித்துறை சார்ந்த பணிகள். வரி சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பு.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**49. சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகள் :**

- இராஜராஜ சோழன், கட்டிய தஞ்சை பெரிய கோயில் கருவறை மீதுள்ள விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது.
- தஞ்சை பெரிய கோயில் கருவறையின் வெளிச்சுவர்களில் இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் சிலைகள் உள்ளன.
- முதலாம் இராஜேந்திர சோழன், கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் கோயில் வட இந்திய வெற்றியின் நினைவாக எழுப்பியது.
- கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறையின் வெளிச்சுவர்களில் துர்கா, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், சூரியன் சிலைகள் உள்ளன.
- இரண்டாம் இராஜராஜ சோழன் கட்டிய தாராசுரம் கோயில் சோழர் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம்.
- தாராசுரம் கோயில் கருவறைச் சுவரின் தளத்தில் பெரிய புராண நிகழ்வுகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டு உள்ளன.

www.Padasalai.Net

**50. சோழர்ஆட்சியில் நிலவிய சமூக, சமய, பண்பாட்டுச் சூழல்கள் :**

- சோழர்களின் சமூகம் பெருமளவு வேளாண்மையைச் சார்ந்து இருந்தது. நிலம் வைத்திருப்பது சமூக மதிப்பையும் நிர்ணயித்தது.
- பிரம்மதேய குடியிருப்புகளில் இருந்த உயர்தகுதி நில உடமையாளர்களுக்கு நில வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.
- சமூகப் படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண் வகை கிராமங்களின் நில உடமையாளர்களும் உழுகுடிகளும் இருந்தனர்.
- சோழர்கள் காலத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன. சிற்பக் கலையும் ஓவியக் கலையும் நன்கு வளர்ச்சி பெற்றது.
- சோழர்களின் முதன்மைக் கடவுள் சிவன். தீவிர சைவ சமய ஆதரவாளராக இருந்ததால் வைணவம் ஒதுக்கப்பட்டது.
- கோயில்களில் தினமும் திருமுறைகளை ஓதவும், பாடல்கள் பாடவும், இசை, நடனம், நாடகம் அரங்கேறவும் வழிசெய்தனர்.

http://www.trbtnpsc.com/2018/07/latest-plus-one-11th-standard-tamil-medium-study-materials-download.html

**51. கோயில் - ஒரு சமூக நிறுவனம் :**

◈ சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்கள் நடக்கும் ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின.

◈ சோழர் காலச் சமூகம், அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்களாகக் கோயில்கள் விளங்கின.

◈ கோயில் அதிகாரிகள் கல்வி, இசை, ஓவியம், நடனம், நாடகம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவித்தனர்.

◈ தஞ்சாவூர் கோயிலில் சித்திரைத் திருவிழா, கார்த்திகை விழா, ஐப்பசி விழா ஆகியவற்றை கொண்டாடி மகிழ்ந்தனர்.

◈ வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்தன. குடக் கூத்து, சாக்கைக் கூத்து போன்ற மரபு நடனங்கள் ஆடினர்.

◈ கோயில்கள் வங்கிகள் போன்று இயங்கின. கடன், நன்கொடைகள் வழங்குதல் மற்றும் பெறுதல் ஆகிய செயல்களில் ஈடுபட்டன.

www.Padasalai.Net

---

**52. பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி :**

◈ பாண்டியர் ஆட்சியில் நடைபெற்ற வணிகம் பற்றி வெளிநாட்டுப் பயணிகளான மார்க்கோபோலோ, வாசாஃப் குறிப்பிட்டுள்ளனர்.

◈ அரபு வணிகர்களுக்கு ஆதரவாக துறைமுகக் கட்டணங்கள் மற்றும் சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டன.

◈ நானாதேவி, திசைஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் ஆகிய வணிகக் குழுக்கள் வணிகத்தில் ஈடுபட்டன.

◈ மிளகு, முத்து, விலை உயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியவற்றை வணிகத்தில் ஈடுபடுத்தினர்.

◈ பாண்டிய அரசர்கள் குதிரைகள் மீது அதிகமாக முதலீடு செய்தனர். அவர்களது முக்கிய துறைமுக நகரம் காயல்பட்டினம்.

◈ வணிகத்தில் பரிமாற்றத்துக்கான ஊடகமாக காசு, பழங்காசு, கனம், கழஞ்சு, பொன் ஆகிய தங்க நாணயங்கள் இருந்தன.

---

**53. பாசனத்தை மேம்படுத்த பாண்டியர்கள் எடுத்த நடவடிக்கைகள் :**

- பாண்டியர்கள் அதிக அளவு பாசன வளங்களை உருவாக்கி அதற்கு அரசக் குடும்பத்தினர் பெயர்களை வைத்தனர்.
- உதாரணம் - வாசுதேவப் பேரேரி, வீரபாண்டியப் பேரேரி, ஸ்ரீவல்லபப் பேரேரி, பராக்கிரமப் பாண்டியப் பேரேரி போன்றவை.
- திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்றும் பெயரிட்டனர். இராமநாதபுரத்தில் பல ஏரிகள் வெட்டப்பட்டன.
- கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குகளைப் பயன்படுத்தியது பாண்டியர்களின் பாசனத் தொழில்நுட்பம் ஆகும்.
- வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. மதகுகள் நிறுவப்பட்டன.
- திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற, பெண்ணை ஆற்றில் வாய்க்கால் அமைத்துத் தந்துள்ளனர்.

www.Padasalai.Net

**54. சோழர், பாண்டியர் காலக் கட்டடக் கலையின் ஒற்றுமை, வேற்றுமைகள் :**

| சோழர் காலக் கட்டடக் கலை | பாண்டியர் காலக் கட்டடக் கலை |
|---|---|
| சோழப் பேரரசர்கள் தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், தாராசுரம் கோயில் போன்ற கட்டுமானக் கோயில்களைக் கட்டினர். | தொடக்க காலப் பாண்டிய அரசர்கள் கல்லறைக் கோயில்கள், குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் என பல்வேறு மாதிரிகளில் கட்டினர். |
| சோழர்களின் கோயில்கள் பெரிய அளவில் மிகவும் பிரமாண்டமானதாக கட்டப்பட்டது. சோழர்கள் சைவர்களாக இருந்ததால், முதன்மைக் கடவுளான சிவன் சிலை பல்வேறு வடிவங்களில் வடிக்கப்பட்டு உள்ளன. | பாண்டியர்களின் கோயில்கள் மிகவும் எளிமையாக சிறியதாக கட்டப்பட்டது. சிவன், விஷ்ணு, பிரம்மன், கணேசன், சுப்பிரமணியர், சூரியன், கொற்றவை, போன்ற கடவுள்களின் சிலைகள் வடிக்கப்பட்டு உள்ளன. |

| | |
|---|---|
| சோழப் பேரரசர்கள் புதிதாக பல கோயில்களைக் கட்டினர். அதேசமயம் மண்டபங்கள் கட்டுவது, பிரகார வீதிகள் அமைப்பது, புதிய கோபுரங்கள் எழுப்புவது போன்ற விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். | பிற்காலப் பாண்டியர்கள் புதிதாக கோயில்களை கட்டவில்லை. மாறாக, மண்டபங்கள் கட்டுவது, பிரகார வீதிகள் அமைப்பது, புதிய கோபுரங்கள் எழுப்புவது போன்ற விரிவாக்கப் பணிகளில் ஈடுபட்டனர். |
| சோழர்கள் சமய சகிப்புத் தன்மையுடன் கொண்டிருந்தனர். இராஜராஜ சோழன் காலத்தில் நாகப்பட்டினத்தில் பௌத்த மடாலயம் கட்டப்பட்டது. | தொடக்க காலப் பாண்டியர்கள் சமண சமயத்தை ஆதரித்தனர். ஆனைமலை கழுகுமலை ஆகிய இடங்களில் சமண குகைக் கோயில்கள் கட்டப்பட்டது. |

www.Padasalai.Net

வாழ்த்துகளுடன்

வரலாறு மாணவர்கள் மற்றும்

வரலாறு ஆசிரியர்கள்

நலனுக்காக